**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும்**
**கதர்த் துறை**

**கைத்தறி மற்றும் துணிநூல்**

# கொள்கை விளக்கக் குறிப்பு

**2012 – 2013**

**மானியக் கோரிக்கை எண்.17**

**மரு.ச.சுந்தரராஜ்**
**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**

**©**
**தமிழ்நாடு அரசு**
**2012**

**2012 – 2013 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு**
**கைத்தறி மற்றும் துணிநூல்**

**அட்டவணை**


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 – 2 |
| 2 | கைத்தறித் தொழில் | 2 – 3 |
| 3 | விசைத்தறித் தொழில் | 3 – 4 |
| 4 | துணித்தொழில் | 4 – 6 |
| 5 | ஆயத்த ஆடைகள் மற்றும் பின்னலாடைத் தொழில் | 6 – 7 |
| 6 | பதனிடும் தொழில் | 7 |
| 7 | துறை | 8 – 10 |
| 8 | தொழிலின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 10 – 15 |
| 9 | 2012–2013 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டங்கள் | 15 – 19 |
| 10 | துறையால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் | 19 – 51 |
| 11 | துறை மேற்கொண்டு வரும் இதர நடவடிக்கைகள் | 51 – 63 |
| 12 | விசைத்தறி பிரிவின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 64 – 73 |
| 13 | 2012–2013 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள் | 73 – 75 |
| 14 | துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் | 75 – 96 |
| 15 | 2012 – 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | 97 - 99 |

**கைத்தறி மற்றும் துணிநூல்**

**2012-2013 ஆம் ஆண்டிற்கான**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

## 1. முன்னுரை

இந்திய ஜவுளித் தொழிலானது நூற்புத் தொழில், கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் தொழில் ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டதாகும். உலக அளவில் இத்தொழிலில் பெருமளவு தறிகள் கொண்ட நாடாக இந்தியா விளங்குகின்றது. நூற்பு கதிர்கள் எண்ணிக்கையில் உலகில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. பல்வகையான கச்சாப்பொருட்கள், திறமையான நெசவாளர்கள், சிறப்பான உற்பத்தி முறை, ஆர்வமிக்க தொழில் முனைவோர் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்திய ஜவுளித் தொழில், விவசாயத்திற்கு அடுத்து நமது நாட்டின் பொருளாதாரத்தை நெடுங்காலமாக நிலைப்படுத்தும் ஆற்றல் கொண்டதாக திகழ்கிறது.

தேசிய மற்றும் மாநில பொருளாதாரத்தில் ஜவுளித் தொழில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. இத்தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னோடி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்வதுடன் அதிக வேலை வாய்ப்பும் வழங்குகிறது.

தமிழ்நாட்டில் ஜவுளித்தொழில் பெருமளவில் தனியார் பிரிவைச் சார்ந்தும், நூற்பை மையமாகக் கொண்டும், தொழிலாளர்களை அதிகமாக உள்ளடக்கியும் இருக்கின்ற காரணத்தால் பரவலாக்கப்பட்ட பிரிவாக பெரும்பகுதி அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் கூட்டு நெசவு ஆலைகள் குறைந்த அளவில் இருப்பதால் பரவலாக்கப்பட்ட விசைத்தறிகளும் பின்னலாடைப் பிரிவுகளும், நெசவு உற்பத்தி தேவையை ஈடு செய்கின்றன.

## 2. கைத்தறித் தொழில்

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில், 1.89 இலட்சம் நெசவாளர் குடும்பங்களுக்கும் மற்றும் 3.19 இலட்சம் நெசவாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கி, முக்கியமான பொருளாதார செயல்பாடு கொண்ட தொழிலாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில், 1,182 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 2.07 இலட்சம் கைத்தறிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 1,035 தொடக்க கைத்தறி பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், 61 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், 86 தொடக்க கைத்தறி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. பெரும்பாலான கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் நெசவாளர்கள் அதிகம் நிறைந்த கிராமம் மற்றும் புறநகர் பகுதிகளில் இயங்கி வருகின்றன. மைய மற்றும் மாநில அரசுகள் செயல்படுத்தும் கைத்தறி நெசவாளர்களுக்கான வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்கள் அனைத்தும் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக நெசவாளர்களை சென்றடைகின்றன. 2011-2012 ஆம்

ஆண்டில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் ரூ. 695.08 கோடி மதிப்புள்ள 892.22 இலட்சம் மீட்டர் கைத்தறி துணிகள் உற்பத்தி செய்து ரூ. 852.42 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டில் 824 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன.

கைத்தறித் தொழிலின் முக்கிய மூலப்பொருளான சிட்டா நூல் தேவைக்கு, அமைப்பு சார்ந்த நூற்பாலைகளை வெகுவாக சார்ந்து இருக்க வேண்டி உள்ளது. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான நூலை தடையின்றி வழங்குவதை மாநில அரசு உறுதி செய்துள்ளது.

## 3. விசைத்தறித் தொழில்

தமிழ்நாட்டில் விசைத்தறித் தொழில் மக்களின் துணித் தேவைகளை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. விசைத்தறிகளில் காடா மற்றும் பதனிடப்பட்ட பல்வேறு துணிவகைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வகை துணிவகைகள் உற்பத்தி செய்யப்படுவதால் நெசவாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. நாட்டின் ஏற்றுமதி வருவாயை பெருக்குவதில் இத்தொழில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது.

இந்திய விசைத்தறித் தொழிலில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் உள்ள 22.92 இலட்சம் விசைத்தறிகளில், தமிழ்நாட்டில் 4.58 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. இதில், 184 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 39,241 விசைத்தறிகள் அடங்கும். தமிழ்நாட்டில் 2011-2012ஆம் ஆண்டில் விசைத்தறி மூலம் ஏறக்குறைய 7,200 மில்லியன் சதுர மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள விசைத்தறிகள் மிகவும் பழமை வாய்ந்த சாதாரண தறிகளாக இருப்பதே விசைத்தறித் தொழிலின் பெரும்பிரச்சனை ஆகும். மேலும், இவை பெரும்பான்மையாக பருத்தியை முதன்மை மூலப்பொருளாக பயன்படுத்தி (செயற்கை இழை நூல்களை விட) உள்நாட்டு தேவைக்கு உற்பத்தி செய்கின்றன. உற்பத்தி திறனை அதிகப்படுத்தி துணிகளின் தரத்தினை உயர்த்துவது மட்டுமே விசைத்தறித்தொழிலின் போட்டியிடும் திறனை அதிகரிக்கும்.

## 4. துணித்தொழில்

### அ. நூற்பு ஆலைகள்

ஜவுளித் தொழில், தமிழக துணித்தொழிலின் முதுகெலும்பாக அமைந்துள்ளது. பெரும்பாலான ஆலைகள், தனியார் நிறுவனங்களாகவும், பருத்தி நூற்பு ஆலைகளாகவும் உள்ளன. இந்தியாவில் உள்ள 3,293 பெரிய மற்றும் நடுத்தர ஆலைகளில் 1,997 ஆலைகள் தமிழ்நாட்டில் மட்டும் உள்ளன. இவற்றுள் 98 விழுக்காடு நூற்பு ஆலைகளாகவும், மற்றவை கூட்டு நெசவு ஆலைகளாகவும் உள்ளன. இதுபோன்று, இந்தியாவிலுள்ள

1,338 சிறிய ஆலைகளில் 1,042 ஆலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. இவற்றின் மொத்த கதிர் திறன் 22.24 மில்லியன் கதிர்கள் ஆகும். அகில இந்திய அளவில் தமிழ்நாடு 46.10 விழுக்காடு கதிர்களைக் கொண்டுள்ளது. பருத்தி நூல் உற்பத்தி மற்றும் இதர வகை நூல் உற்பத்தியில் தமிழகம் முதன்மை மாநிலமாக உள்ளது. நாட்டின் பருத்தி நூல் ஏற்றுமதியில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இந்தியாவில் ஜவுளித் தொழில் கணிசமான வருவாயை ஈட்டித் தருவதுடன், ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணியையும் மத்திய, மாநில அரசுகளுக்கு பெற்றுத் தருகிறது.

**ஆ. கூட்டுறவு நூற்பாலைகள்**

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான தரமான சிட்டா நூலை நியாயமான விலையில், தடையின்றி வழங்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடனும், கிராமப் பகுதிகளிலுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும் 18 கூட்டுறவு நூற்பாலைகள் தமிழ்நாட்டில் 1958 முதல் 1985 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் 4.70 இலட்சம் கதிர் திறன்களுடன் ஆரம்பிக்கப்பட்டன.

காலப்போக்கில் ஆலைகளிலுள்ள பழமையான இயந்திரங்கள், குறைந்த உற்பத்தி திறன், ஜவுளித்தொழிலின் மந்த நிலை, கச்சாப்பொருட்களின் அதிக விலை போன்ற பல்வேறு காரணங்களால் கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டன. இதனால் 1997-1998 ஆம் ஆண்டு முதல் 2003-2004 ஆம் ஆண்டு வரை 13 கூட்டுறவு நூற்பாலைகள் செயலிழந்தன. தற்பொழுது 5 கூட்டுறவு நூற்பாலைகள் மட்டும் 97,280 நூற்பு கதிர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

இவ்வைந்து கூட்டுறவு நூற்பாலைகளும், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பள்ளிச் சிறார்களுக்கான விலையில்லா சீருடை திட்டம் ஆகிய திட்டங்களுக்குத் தேவையான நூல் இரகங்களையும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வெளிச்சந்தை உற்பத்திக்குத் தேவையான நூல் இரகங்களையும் உற்பத்தி செய்கின்றன.

## 5. ஆயத்த ஆடைகள் மற்றும் பின்னலாடைத் தொழில்

தமிழகத்தின் ஜவுளித் தொழிலில், ஆயத்த ஆடைத் தொழில் வளர்ந்து வரும் ஒரு பிரிவாகும். பின்னலாடைத் தொழிலில் பெற்ற வளர்ச்சியைத் தொடர்ந்து, தமிழகம் சிறந்த ஆயத்த ஆடைத் தொழில் மையமாக உருவாகி வருகிறது. சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில், பருத்தி மற்றும் செயற்கை இழைகளிலான ஆயத்த ஆடை நிறுவனங்கள் அமைந்துள்ளன. நாட்டின் பொருளாதாரத்தில் ஆயத்த ஆடை தொழில் மிக முக்கிய பங்கினை பெற்றுள்ளதால், மாநிலத்தில் இத்தொழில் முக்கியத்துவம் பெற்று வருகிறது.

நமது மாநிலத்தில் பின்னலாடைத் தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் திருப்பூர் பகுதியில் அமைந்துள்ளன. இந்தியாவில்



மொத்தம் உள்ள 12,645 பின்னலாடைத் தொழில் நிறுவனங்களில், 2,500 நிறுவனங்கள் திருப்பூரில் அமைந்துள்ளதுடன், 3.20 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் அளித்து வருகின்றன. ஆண்டொன்றுக்கு 23 மில்லியன் சதுர மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

## 6. பதனிடும் தொழில்

புதிய யுக்திகளுக்கான எண்ணற்ற வாய்ப்புகளைக் கொண்டதாகவும், பொருட்கள் முழுத் தன்மை அடைய முக்கிய பங்கு வகிப்பதாகவும் உள்ள பதனிடும் தொழில், விற்பனைக்கான துணியின் தரம் மற்றும் மதிப்பினை நிர்ணயம் செய்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் இத்துறை பல கூறுகளாக இயங்கிவருகிறது. அவற்றை பின்வரும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்:-

- கையினால் பதப்படுத்தப்படும் முறை.
- பகுதியளவிலான மின்சக்தியைப் பயன்படுத்தி பதனிடும் ஆலைகள்.
- மின்சக்தியைப் பயன்படுத்தி பதனிடும் ஆலைகள்.
- கூட்டு ஆலை அல்லது பகுதி கூட்டு ஆலைகளுடன் இணைந்த பதனிடும் பிரிவுகள்.

## 7. துறை

கைத்தறி நெசவாளர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி, கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்துவது கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முக்கிய நோக்கங்களாகும்.

மாநிலத்தில் கூட்டுறவின் கீழ் செயல்படும் நெசவுத் தொழில் சார்ந்த கூட்டுறவு அமைப்புகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988–இன்படி கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் செயற்பதிவாளராக செயல்படுகிறார். நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான நூல் மற்றும் இதர மூலப்பொருட்களை விநியோகிப்பதும், உற்பத்தி செய்யப்பட்ட துணி வகைகளை கோ–ஆப்டெக்ஸ், லூம்வேர்ல்டு, சங்கங்களின் விற்பனை நிலையங்கள் மற்றும் இதர விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிறப்பு கவனம் செலுத்தும் பொறுப்பு இத்துறையைச் சார்ந்ததாகும். கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் கிடைப்பதை உறுதி செய்ய, கூட்டுறவு நூற்பாலைகள் நூல்களை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் அனைத்து திட்டங்களை முறைப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பும் இத்துறையைச் சார்ந்ததாகும்.

நெசவாளர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களின் நலனுக்கென பல்வேறு நலத்திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் 20 சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் மூலமாகச் செயல்படுத்தும் பணியினையும் இயக்குநரகம் மேற்கொண்டு வருகிறது.

தலைமை அலுவலகத்தில் இயக்குநருக்கு உதவியாக கைத்தறி மற்றும் துணிநூல் கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர் (கைத்தறி), இணை இயக்குநர் (சீருடை), இணை இயக்குநர் (துணிநூல்), நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், துணை இயக்குநர் (துணிநூல்) மற்றும் துணை இயக்குநர் (அமலாக்கம்) ஆகியோர் உள்ளனர்.

இத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:-

- 1,182 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்
- 184 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்
- 18 கூட்டுறவு நூற்பாலைகள் (அண்ணா (தேனி), பாரதி (தூத்துக்குடி), புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 5 கூட்டுறவு நூற்பாலைகள் தற்சமயம் இயங்கி வருகின்றன)

- தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை
- தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை
- தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்
- தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சிபுரம்
- தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு
- தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம், சென்னை

## 8. தொழிலின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

மாநிலத்தின் துணித்தொழிலானது பெருமளவில் வருவாயையும், வேலைவாய்ப்பையையும் அளித்து மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளதால், மாநில அரசு நெசவாளர்களின் நலனுக்காகவும் தொழிலின் வளர்ச்சிக்காகவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 8.1. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு – மீண்டும் திறந்து செயல்படுத்துதல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சாயக்கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றாததால் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு, 23.02.2011 முதல் மூடப்பட்டது.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மூடப்பட்டிருந்த இவ்வாலையை உடனே திறக்கும் நோக்கத்துடன் மாசு கட்டுப்பாடு வாரியம் விதித்த அபராதத் தொகை ரூ.1,11,46,363/- முழுவதையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு செலுத்தப்பட்டு மூடப்பட்டிருந்த இவ்வாலை 10.06.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி முறையில் (வீடியோ கான்பரன்சிங்) தொடங்கி வைக்கப்பட்டு, தற்பொழுது தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

2011-2012 ஆம் ஆண்டில் இந்நிறுவனம், **102.55** இலட்சம் மீட்டர் துணிகளை பதனிட்டு, ரூ.14.57 கோடி அளவிற்கு வணிகம் மேற்கொண்டுள்ளது.

### 8.2. திருப்பூர் சாயப்பட்டறை பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்

திருப்பூர் பகுதியில் உள்ள சாயத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் மாசுடன் கூடிய சாயக் கழிவு நீர் ஈரோடு மாவட்டம் ஒரத்துப்பாளையம் அணையில் கலந்து, அதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.

சென்னை உயர்நீதிமன்றம் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை தடுக்க பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து பூஜ்ய கழிவு நீர் நிலையை உறுதி செய்யவேண்டுமென ஆணை பிறப்பித்தது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணையினைத் தொடர்ந்து, 18 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டன. அதேநேரத்தில் திருப்பூர் சாயச்சாலை உரிமையாளர்கள் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய ஆணையினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். ஆனால், உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் வழங்கிய ஆணையினை உறுதி செய்தது.

தற்போதைய அரசு, இப்பிரச்சனையைத் தீர்க்க முன்வந்து, பொது சுத்திகரிப்பு நிலையங்கள் கண்டறியப்பட்ட பிரைன் மறுபயன்பாடு தொழில் நுட்பம் (Brine Reuse Technology) அல்லது நானோ தொழில்நுட்பம் (Nano Technology) ஆகிய இரண்டு தொழில்நுட்பங்களில் ஏதாவது ஒன்றினைப் பயன்படுத்தி, சாயச்சாலைகள் பூஜ்ய கழிவு நீர் நிலையை எய்துவதற்கு ரூ.200 கோடியை வட்டியில்லாக் கடனாக அனுமதித்துள்ளது.

### 8.3. விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்

ஒவ்வோர் ஆண்டும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழைகள் பயன்பெறும் வகையிலும், கைத்தறி, விசைத்தறித் தொழில்களில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கவும் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. விலையில்லா வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்திற்கு தேவைப்படும், 170.84 இலட்சம் சேலைகள் மற்றும் 169.75 இலட்சம் வேட்டிகளுக்கான உற்பத்தி ரூ.350 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்திற்குத் தேவையான வேட்டி, சேலைகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விசைத்தறி நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான கூலி உயர்வினை, அரசு கனிவுடன் பரிசீலனை செய்து, வேட்டி மற்றும் சேலை இரகங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நெசவு கூலியினை வேட்டி ஒன்றுக்கு ரூ.16/–லிருந்து ரூ.18.40 ஆகவும், சேலை ஒன்றுக்கு ரூ.28.16–லிருந்து ரூ.31.68 ஆகவும் உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதனால் அரசு ரூ.9.64 கோடியை கூடுதல் நெசவுக்கூலியாக வழங்கியுள்ளது.

### 8.4. நெசவாளர் முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் உயர்த்தி வழங்குதல்

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியத் தொகையினை ரூ.400/– லிருந்து ரூ.1,000/– ஆகவும், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் மாத குடும்ப ஓய்வூதியத் தொகையினை ரூ.550/–லிருந்து ரூ.1,000/– ஆகவும், உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இதனால் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 18,646 கைத்தறி நெசவாளர்களும், குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1,549 பயனாளிகளும் பயனடைந்து வருகின்றனர். இப்பயனாளிகளுக்கு, 2011-2012 ஆம் ஆண்டிற்கான நிலுவைத் தொகை ரூ.356 இலட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டங்களின் செயலாக்கத்திற்கு அரசு கணக்கிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.19.11 கோடி அளவிற்கு செலவினம் ஏற்படும்.

## 8.5 மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காத் திட்டத்தின் கீழ் புதிய ஜவுளிப் பூங்காக்கள் அமைத்தல்

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காத் திட்டத்தின் கீழ் மத்திய அரசானது உலகத்தரம் வாய்ந்த ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்களை உருவாக்கி ஜவுளித் தொழிலை மேம்படுத்தும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 2 புதிய ஜவுளிப் பூங்காக்களை அமைப்பதற்கு 2011–2012 ஆம் ஆண்டில் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம், பாகலூர் என்னும் இடத்தில் ரூ.126.20 கோடி திட்ட மதிப்பீட்டிலும், திருவள்ளூர் மாவட்டம் பல்லவாடா என்னும் இடத்தில் ரூ.117.08 கோடி திட்ட மதிப்பீட்டிலும் 2 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளன.

தமிழகத்தில் ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பதனால் நேரடி முதலீடு அதிகரித்து அதிக வேலை வாய்ப்புகள் ஏற்படும் என்பதால் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் அமைக்கப்பட்டு வரும் அனைத்து ஜவுளிப் பூங்காக்களுக்கும் அவற்றின் திட்டத் தொகையில் 9 விழுக்காடு அளவிற்கு ரூ.9 கோடிக்கு மிகாமல் மாநில அரசின் மானியமாக நிதியுதவி வழங்க தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

## 9. 2012–2013 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டங்கள்

மாநிலத்தின் வேகமான வளர்ச்சிக்கு உதவிடும் முக்கிய தொழில்களில் ஒன்றாக ஜவுளித் தொழில் அரசால் இனங்காணப்பட்டுள்ளது. இத்தொழில் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் கட்டமைப்பு இடர்பாடுகளை களைய சீரிய முயற்சி மேற்கொள்ளப்படும். தாரளமயமாக்கல் கொள்கைகளினால் உற்பத்தி திறன், தரம் மற்றும் விலையில் போட்டியிடும் தன்மை போன்ற இனங்களில் மாற்றங்களையும் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இத்துறைக்கு எழுந்துள்ளது.

மேலும், தமிழகம், தனது ஜவுளித் தொழிலுக்குத் தேவையான பருத்தி உற்பத்தி தேவைக்கேற்ப இல்லாமல் மிகவும் குறைந்து இருப்பதனால் பிற மாநிலங்களைச் சார்ந்துள்ளது.

ஒட்டுமொத்த சமச்சீரான வளர்ச்சியினை அடையவும், கீழ்க்கண்ட நிகழ்வுகளை எதிர்கொள்ள சரியான சூழலை

ஏற்படுத்தவும் அரசு வசதிகளை ஏற்படுத்தி தரும் கருவியாகவும், கிரியா ஊக்கியாகவும் செயல்பட உத்தேசித்துள்ளது :-

- நிலைத்த தன்மையுள்ள தகுதி வாய்ந்த நிறுவனங்களுக்குத் தேவைப்படும் முதலீடுகளை மேம்படுத்துதல்
- உற்பத்தித் திறன் மற்றும் தர மேம்பாட்டிற்காக தொழில் நுட்ப தரத்தினை உயர்த்துதல்
- ஆலைகள், விசைத்தறிகள் மற்றும் நெசவு சார்ந்த பதனிடுதல் ஆகியவற்றிற்கு உள்கட்டமைப்பு வசதியினை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்

மேற்கூறிய செயல்பாடுகளுக்கு 12–ஆவது ஐந்தாண்டு திட்ட நிதிகளும் புதிய செயல் திட்டங்களும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

## 9.1 செயல்திறன் மற்றும் உற்பத்தியினை மேம்படுத்துதல்

நிர்வாகத்தில் நவீன யுக்திகள், உற்பத்தி முறைகள், நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துதல், நவீன சாயமிடும் முறைகள், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல், ஏற்றுமதி ஆகியன குறித்த பயிற்சி தொழில் வளர்ச்சி நீடிப்பதற்குரிய காரணிகளில் முக்கியமானவையாகும். இது அனைத்து தொழிலுக்கும் பொருந்தும். எனவே, தொழிலின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது மிகவும் அவசியமாக உள்ளது. மூலப்பொருளுக்கான செலவினத்தை அதிகரிக்காமல், தரம் மற்றும் தரத்தை பற்றிய விழிப்புணர்வை அதிகப்படியாக வலியுறுத்தி ஒட்டுமொத்த தரத்தினை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது.

இத்தொழிலில் தன்னிறைவு அடைவதற்கேதுவாக, தொழில் நுட்பப் பயிலகங்களுடன் உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டு தொழிலுக்குத் தேவையான தொழிலாளர்கள் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு அடிப்படை மற்றும் அவ்வப்போது பயிற்சி அளிப்பது அவசியமாகிறது. மத்திய, மாநில அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் உள்ள நிதியினைப் பயன்படுத்தி கிராமப்புற ஆண்கள் மற்றும் பெண்களுக்குப் பயிற்சி அளித்து தொழிலுக்குத் தேவையான பயிற்சி பெற்ற பணியாளர்கள் கிடைப்பதற்கான சூழல் உருவாக்கப்படும்.

## 9.2 கைத்தறித் தொழிலுக்கான புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்புத் திட்டம்

கைத்தறி துறைக்காக, மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்புத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்படும். கைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ள கூட்டுறவு சங்கங்கள், தனியார் நெசவாளர்கள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர். இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு உத்தேசமாக ரூ.548 கோடி நிதி உதவி கிடைக்கும்.

இதில் மாநில அரசின் பங்கு உத்தேசமாக ரூ127 கோடி ஆகும். இத்திட்டத்தின் கீழ் 962 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மறுசீரமைக்கப்பட உள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்தும் முகமை நிறுவனமாக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு வங்கி) செயல்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் விதமாக மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கியுடன் மாநில அரசால் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும்.

### 9.3 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்துதல்

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதி உதவியுடன், தற்போது இயங்குகின்ற 5 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்த, தென்னிந்திய துணிநூல் ஆராய்ச்சிக் கழகம் மூலம் ரூ.104.41 கோடி மதிப்பில் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

### 9.4 பரவலாக்கப்பட்ட விசைத்தறித் தொழிலை நவீனப்படுத்துதல்

விசைத்தறிகளில் உற்பத்தியினை பெருக்குதல் மற்றும் உற்பத்தி செய்யப்படும் துணிகளின் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றுக்கு தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதே விசைத்தறித் தொழிலின் முக்கிய கொள்கை ஆகும். இத்தொழிலில் ஈடுபட்டுள்ள விசைத்தறியாளர்களுக்கு சமூக பாதுகாப்பு ஏற்படுத்துவதற்குரிய நல்வாழ்வுத் திட்டங்களை அளிப்பதும் கொள்கைகளில் ஒன்றாகும்.

அதிக அளவு விசைத்தறிகள் கொண்ட பகுதிகளைக் கண்டறிந்து, அவற்றைத் தொழில் நுட்ப மேம்பாட்டுடன் கூடிய சிறப்பு வாய்ந்த மையங்களாக உருவாக்கத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள், இந்த மையங்கள் வளர்ச்சி நிலையை எய்திட இவைகளின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் வகையில் பிரத்யேகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 9.5 மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்துதல்

கைத்தறித் துணி விற்பனையினை அதிகரிக்க மத்திய அரசின் நிதியுதவியுடன் பல்வேறு மாவட்டங்களில், மாவட்ட அளவிலான கண்காட்சிகளை 2012-2013 ஆம் ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2012–2013 ஆம் ஆண்டில் 43 மாவட்ட அளவிலான கைத்தறிக் கண்காட்சிகளும், 11 சிறப்பு கைத்தறிக் கண்காட்சிகளும் மற்றும் 1 தேசிய கைத்தறிக் கண்காட்சியும் நடத்துவதற்கு மைய அரசால் உத்தேச ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

### 10.1. விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துதல்

தமிழ்நாட்டிலுள்ள, ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் பண்டிகையின்போது விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்,

அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கும் வகையில், இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து வேட்டி, சேலைகளும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் 13,000 கைத்தறி நெசவாளர்களுக்கும், 41,000 விசைத்தறி தொழிலாளர்களுக்கும் ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு வழங்கப்படுவதுடன், 340 இலட்சம் ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் பண்டிகையின்போது விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கப்படுகின்றன.

மாநிலத்திலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்த வேட்டி சேலைகளைக் கொள்முதல் செய்து வருவாய்த் துறைக்கு வழங்கும் பணிக்கு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. **2011–2012** ஆம் ஆண்டு இத்திட்டத்தினை செயல்படுத்த **ரூ.350** கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2013 பொங்கல் பண்டிகைக்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்த, 2012-2013 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் **ரூ.268.80** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.2. முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்க்கு பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின்போது விலையில்லா வேட்டி சேலைகள் வழங்குதல்

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளின்போது முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு தேவையான விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் மாநிலத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2012-2013 ஆம் ஆண்டிற்கு முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்க்கு தேவையான **11** இலட்சம் வேட்டிகள் மற்றும் 33 இலட்சம் சேலைகளை விலையில்லாமல் வழங்கிட நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

## 10.3 பள்ளிச் சிறார்களுக்கு விலையில்லா சீருடை வழங்குதல்

பள்ளிச் சிறார்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டம், 1985-1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியர்க்கு சமூக நலத்துறை மூலம் இத்திட்டத்திற்குத் தேவைப்படும் காக்கித் துணி, நீல நிற பாவாடைத்துணி, நீல நிற தாவணி, வெள்ளை சட்டை ஆகிய அனைத்தும் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் மூலமாகவும், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் மூலமாகவும் வழங்கப்படுகிறது.

இவை தவிர, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைகளுக்குத் தேவைப்படும் முழுக்கால் சட்டை, கோடிட்ட சட்டைகள், சுடிதார், சுடிதார் துப்பட்டா மற்றும் பாவாடை போன்ற சீருடைத் துணிகள், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படுகிறது

பல்வேறு துறைகள் வாரியான சீருடைத் துணிகளின் தேவை விவரங்கள் பின்வருமாறு:-

| **துறையின் பெயர்** | **மொத்த அளவு (மீட்டர் இலட்சத்தில்)** | **மாணவ மாணவியரின் எண்ணிக்கை** |
|---|---|---|
| சமூகநலத் துறை | 525.15 | 4685078 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | 15.17 | 291542 |
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை | 1.29 | 87750 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை | 2.98 | |
| **மொத்தம்** | **544.59** | **5064370** |

இதன் மூலம் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள **1,500** கைத்தறி நெசவாளர்களும், **7,000** விசைத்தறி தொழிலாளர்களும் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெறுகின்றனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்க்கு, 2012-2013ஆம் கல்வி ஆண்டுமுதல் நான்கு இணை சீருடைகள் வழங்கப்பட உள்ளது. மேலும், 6 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் பயிலும் மாணவர்களுக்கு அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டையும், மாணவியர்க்கு பாவாடை தாவணிக்குப் பதிலாக சல்வார் கமீசும் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடப்பு கல்வி ஆண்டு **(2012–2013)** முதல் மாணவ, மாணவியர்க்கு வழங்கப்படவுள்ள சீருடைத் துணிகளின் நிறத்தை மாற்றியமைத்து, மாணவர்களுக்கு மெரூன் (Maroon) நிற முழுக்கால் சட்டையும் மற்றும் வெளிர் பிரவுன் நிற மேல் சட்டையும், மாணவியர்க்கு மெரூன் நிற சல்வார் கமீசும், வெளிர் பிரவுன் நிற துப்பட்டாவும் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் சீருடைத் துணி உற்பத்தி செய்யவும், அதன் மூலம் நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் விதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **2011–2012** ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென **ரூ.164.70** கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2012-2013 ஆம் கல்வி ஆண்டில் ரூ.233.95 கோடி (சாயச்செலவு நீங்கலாக) மதிப்பிலான 525.10 இலட்சம் மீட்டர் அளவுள்ள துணிகள் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த தொடக்க கல்வி துறையின் 2012-2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு ரூ.116.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.4 தள்ளுபடி மானியத் திட்டம் / விற்பனை ஊக்குவிப்புத் தொகை வழங்குதல்

கைத்தறித் துணி வகைகளின் விற்பனையை மேம்படுத்திட, மாநில அரசு தள்ளுபடி மானியம் வழங்கி வருகிறது. இத்திட்டம், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் விற்பனையை அதிகரிப்பதுடன், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து நிரந்தர வேலைவாய்ப்பினை உறுதி செய்கிறது. இத்திட்டம், கைத்தறித் தொழிலை ஆலை மற்றும் விசைத்தறி தொழில்களால் ஏற்படக்கூடிய கடுமையான போட்டியிலிருந்து பாதுகாக்கவும் வழிவகுக்கின்றது.

இத்திட்டத்தின் கீழ், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. பருத்தி இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.100/– அல்லது 20 விழுக்காடு, இதில் எது குறைவோ, அத்தொகை, அதேபோன்று பட்டு துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.200/– அல்லது 20 விழுக்காடு, இதில் எது குறைவோ, அத்தொகை தள்ளுபடி மானியமாக வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்ட விற்பனை ஊக்குவிப்பு இனத்தின் கீழ், தள்ளுபடி மானியத் திட்டத்திற்கு, மைய அரசும் தனது பங்கினை வழங்கி வருகிறது.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு 2001 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் ஜனவரி **31** ஆம் தேதி வரை **139** நாட்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன், கூடுதலாக **10** விழுக்காடு சிறப்பு தள்ளுபடியும் சேர்த்து 30 விழுக்காடு தள்ளுபடி மானியம் கைத்தறி துணிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதாவது, பருத்தி துணி வகைகளுக்கு அதிகபட்சமாக **30** விழுக்காடு அல்லது ரூ.150/– இதில் எது குறைவோ அத்தொகையும், பட்டு துணி வகைகளுக்கு 30 விழுக்காடு அல்லது ரூ.300/– இதில் எது குறைவோ அத்தொகையும் தள்ளுபடி மானியமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. **2011–2012** ஆம் ஆண்டு இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.**165.95** கோடி அரசால்

விடுவிக்கப்பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு தள்ளுபடி மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.156.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 10.5 வட்டி மானியம் வழங்குதல்

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (நபார்டு வங்கி) மறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் நடைமுறை மூலதனக் கடன்களைப் பெற்று வருகின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் காசுக்கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டிச் சுமையினைக் குறைக்கும் நோக்கத்திலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கவும் வட்டி மானியத் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம் பெறப்படும் நடைமுறை மூலதனத்திற்கு வங்கிகளால் வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தில் 4 விழுக்காடு வட்டித் தொகை மானியமாக காலாண்டுக்கு ஒருமுறை அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டு இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.13 கோடி அரசால் விடுவிக்கப்பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2012-2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 10.6 கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துதல்

கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு இருமாதத்திற்கொருமுறை 100 யூனிட்டுகள் வரையில் மின்சாரம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1,57,264 கைத்தறி நெசவாளர்கள் மின் இணைப்பு பெற்று பயன் பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்திற்காக, 2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.6.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 10.7 ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்துதல்

கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டும், கைத்தறித் தொழிலை மேம்படுத்திடவும், தெரிவு செய்யப்பட்ட கைத்தறி செறிவுப் பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்களின்

ஒட்டுமொத்த சமூக பொருளாதார நிலையை உயர்த்திடவும், அவர்களை தற்சார்பு அடையச் செய்யும் நோக்குடன் மைய அரசின் திட்டமான "ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம்" தமிழக அரசால் மாநில அரசின் பங்களிப்போடு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் 4 முக்கிய இனங்கள் பின்வருமாறு:–

அ. கைத்தறி குழும வளர்ச்சி திட்டம் (Cluster Development Programme)

ஆ. கைத்தறி வளர்ச்சிக்கான குழு அணுகுமுறை (Group Approach for Development of Handlooms).

இ. கைத்தறி நிறுவனங்களுக்கு நிதியுதவி (Assistance for Handloom Organisations).

ஈ. புதிய யுக்திகள், விளம்பரம், மேற்பார்வை, கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திட்ட மதிப்பாய்வு ஆகிய பல்வேறு இனங்களுக்கு உதவித்தொகை (Assistance for Innovative Ideas, Publicity, Supervision, Monitoring, Training and Evaluation of Scheme)



### அ) கைத்தறி குழும வளர்ச்சித் திட்டம்

கைத்தறி குழும வளர்ச்சித் திட்டமானது, நெசவாளர்களை ஒரு குழுவாக ஒருங்கிணைத்து அவர்களை தற்சார்பு அடைய செய்யும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 300 முதல் 500 தறிகள் கொண்ட கைத்தறி குழுமப் பகுதிகளை மேம்படுத்த ஒவ்வொரு குழுமத்திற்கும் ரூ.60 இலட்சம் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 3 ஆண்டு காலத்திற்கு பயிற்சி, தறி மேம்பாடு, தறியில் மாறுதல்கள் செய்தல், தறி மற்றும் தறி உபகரணங்கள் கொள்முதல் செய்தல், சாயச்சாலை உருவாக்குதல், பொது வசதி மையம் நிறுவுதல், காட்சியறை நிறுவுதல், பொருட்காட்சி நடத்துதல், விளம்பரம் மற்றும் வடிவமைப்பு ஆகிய பல்வேறு இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கான நிதி உதவி மத்திய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 7 கட்டமாக 52 கைத்தறிக் குழுமங்களுக்கு மொத்த திட்ட மதிப்பீடான ரூ.34.82 கோடியில், மத்திய அரசின் மானியமாக ரூ.31.76 கோடியும் மாநில அரசின் மானியமாக ரூ.2.49 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் பயனாளிகளின் பங்கு ரூ.0.57 கோடி ஆகும். இத்திட்டம் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த மத்திய மற்றும் மாநில அரசுகள் இதுவரை ரூ.23.37 கோடி தொகையினை மானியமாக 52 கைத்தறி குழுமங்களுக்கு விடுவித்துள்ளது.

**ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 52 கைத்தறி குழுமங்கள் விவரம்:–**

(Handloom Clusters)

| வ. எண் | கைத்தறி செறிவுப்பகுதியின் பெயர் | திட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்) | இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| பகுதி – 1, 2006–2007, செயல்படுத்தும் முகமை – கோ–ஆப்டெக்ஸ் (2), ஜவுளிக் குழு (1) | | | |
| 1. | திருச்சிராப்பள்ளி | 200.00 | 101.73 |
| 2. | திருவண்ணாமலை | 200.00 | 107.45 |
| 3. | குறிஞ்சிப்பாடி | 200.00 | 105.65 |
| பகுதி – 2, 2007–2008, செயல்படுத்தும் முகமை – கோ–ஆப்டெக்ஸ் | | | |
| 4. | நிலையூர் | 59.70 | 58.80 |
| 5. | வீரவநல்லூர் | 59.70 | 34.26 |
| 6. | பாதிரிவேடு | 59.70 | 58.80 |
| 7. | ஜெயங்கொண்டம் | 59.70 | 58.80 |
| 8. | கண்டாச்சிபுரம் | 59.70 | 58.80 |

| வ. எண் | கைத்தறி செறிவுப்பகுதியின் பெயர் | திட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்) | இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 9. | ஆப்பக்கூடல் | 59.70 | 58.80 |
| 10. | சோளிங்கர் | 59.70 | 58.80 |
| 11. | சிறுமுகை | 59.70 | 58.80 |
| 12. | தாண்டாம்பாளையம் | 59.70 | 58.80 |
| 13. | பழநி | 59.70 | 58.80 |
| பகுதி – 3, 2007–2008, செயல்படுத்தும் முகமை – கைத்தறி மற்றும் துணிநூல் துறை | | | |
| 14. | எமனேஸ்வரம் | 59.90 | 58.51 |
| 15. | வெங்கமேடு | 60.00 | 58.53 |
| 16. | எடப்பாடி | 52.60 | 51.35 |
| 17. | தாசப்பகவுண்டன் புதூர் | 59.08 | 55.78 |
| 18. | சென்னிமலை | 58.30 | 57.25 |
| 19. | பள்ளியாடி | 58.50 | 57.52 |
| 20. | திருப்பூர் | 59.00 | 57.50 |
| 21. | புனல்வேலி | 55.00 | 54.00 |
| 22. | திருபுவனம் | 58.10 | 58.10 |

| வ. எண் | கைத்தறி செறிவுப்பகுதியின் பெயர் | திட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்) | இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 23. | ஆட்டையாம்பட்டி | 59.99 | 58.97 |
| 24. | வண்டியூர் | 60.00 | 57.27 |
| 25. | சாயர்புரம் | 59.00 | 58.22 |
| 26. | சின்னாளப்பட்டி | 59.00 | 59.00 |
| 27. | குடியாத்தம் | 60.00 | 52.50 |
| 28. | புதுப்பேட்டை | 58.25 | 54.50 |
| பகுதி – 4, 2008–2009, செயல்படுத்தும் முகமை – தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் | | | |
| 29. | பிள்ளையார்பாளையம் | 56.00 | 33.34 |
| 30. | நடுவீரப்பட்டு | 42.00 | 24.35 |
| 31. | அய்யம்பேட்டை | 60.00 | 39.86 |
| 32. | பரமத்தி வேலூர் | 60.00 | 26.70 |
| 33. | பொள்ளாச்சி | 59.75 | 33.30 |
| 34. | பரமக்குடி | 60.00 | 25.40 |
| 35. | செல்லூர் | 54.59 | 37.18 |
| 36. | ஸ்ரீவில்லிப்புத்தூர் | 60.00 | 32.47 |
| 37. | தொட்டம்பாளையம் | 60.00 | 32.85 |

| வ. எண் | கைத்தறி செறிவுப்பகுதியின் பெயர் | திட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்) | இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| பகுதி – 5, 2008–2009, செயல்படுத்தும் முகமை – நெசவாளர் சேவை மையம் | | | |
| **38.** | எஸ்ஸேலம் | 60.00 | 60.00 |
| **39.** | திருமால்பூர் | 60.00 | 43.52 |
| **40.** | தாதகாப்பட்டி | 60.00 | 46.58 |
| பகுதி – 6, 2010–2011, செயல்படுத்தும் முகமை – கைத்தறி மற்றும் துணிநூல் துறை | | | |
| **41.** | பாண்டியன்நகர் | 60.00 | 15.15 |
| **42.** | காஞ்சிக்கோவில் | 60.00 | 13.33 |
| **43.** | பவானி | 59.00 | 10.16 |
| **44.** | முருகன் | 60.00 | 8.99 |
| **45.** | வதம்பச்சேரி | 60.00 | 14.97 |
| **46.** | செங்குந்தபுரம் ஸ்ரீசுந்தர விநாயகர் | 60.00 | 12.80 |
| **47.** | பள்ளக்காட்டுபுதூர் | 58.40 | 13.23 |
| **48.** | பாளையங்கோட்டை | 60.00 | 14.61 |
| பகுதி – 7, 2010–2011, செயல்படுத்தும் முகமை – கோ–ஆப்டெக்ஸ் | | | |
| **49.** | பல்லவர் | 60.00 | 17.15 |
| **50.** | வரதராஜா | 60.00 | 18.76 |
| **51.** | ஆரணி | 59.55 | 18.38 |
| **52.** | இராசிபுரம் | 59.18 | 15.94 |
| | **மொத்தம்** | 3482.19 | 2336.31 |

2011–2012 ஆம் ஆண்டு இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.8.65 கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த, 2012–2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ஆ) கைத்தறி வளர்ச்சிக்கான குழு அணுகுமுறைத் திட்டம் (Group Approach for Development of Handlooms)

கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வராத கைத்தறி நெசவாளர்கள் பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் குழு அணுகுமுறைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்குழு, குறைந்தபட்சம் 10 நெசவாளர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நெசவாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக்குழுவாகவோ, தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கமாகவோ, தனி நெசவாளராகவோ இருத்தல் வேண்டும்.

ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் குழு அணுகுமுறை இனத்தின் கீழ் விளிம்புத் தொகை, புதிய தறிகள், டாபி, ஜக்கார்டு மற்றும் தறி உபகரணங்கள், பயிற்சி மற்றும் தறிக்கூடம் அமைத்தல் உள்ளிட்ட இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் இரண்டாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ், தமிழகத்திற்கு ரூ.19.15 கோடி மொத்த திட்டத் தொகையில் 271 குழு அணுகுமுறைத் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் ரூ.14.46 கோடி மத்திய அரசின் மானியமாகவும், ரூ.3.45 கோடி மாநில அரசின் மானியமாகவும், எஞ்சிய தொகையான ரூ.1.24 கோடி பயனாளிகளின் பங்களிப்பாகவும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. மொத்தம் உள்ள 271 குழு அணுகுமுறைத் திட்டங்களில், இதுவரை 119 திட்டங்கள் ரூ.10.28 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 152 குழு அணுகுமுறைத் திட்டங்களுக்கு முதல் தவணை அரசு மானியமாக இதுவரை ரூ.5.42 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் கீழ், 13621 நெசவாளர்கள் பயன்பெறுகின்றனர்.

**2011–2012** ஆம் ஆண்டு இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.**2.63** கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த, 2012-2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இ) கைத்தறி நிறுவனங்களுக்கு நிதி உதவி

### i) விற்பனை ஊக்குவிப்புத் திட்டம்

கைத்தறித் துணிகளை, சந்தையில் தக்க விலையில் விற்பனை செய்ய ஏதுவாக, கைத்தறித் தொழிலுக்கு விற்பனை ஊக்குவிப்பு வழங்கப்படுகிறது. இந்த விற்பனை ஊக்குவிப்புத் தொகை, நுகர்வோரைக் கவரும் வண்ணம் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்கு, கைத்தறி நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டு கைத்தறித் துணி வகைகளின் ஒட்டுமொத்த விற்பனைக்கு வழிவகுக்கிறது. மாநில கைத்தறிக் கழகங்கள், தலைமைக் கூட்டுறவு சங்கங்கள், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய கைத்தறி நிறுவனங்களுக்கு விற்பனை ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி விற்பனையில், 10 விழுக்காடு தொகை விற்பனை ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

### ii) கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்துதல்

இத்திட்டத்தின்கீழ், தேசிய மற்றும் மாநில அளவிலான கைத்தறி நிறுவனங்கள், கைத்தறி கழகங்கள், தலைமை கூட்டுறவு சங்கங்கள் போன்றவற்றின் காசுக்கடன் மற்றும் நடைமுறை மூலதனம் போன்றவற்றை மேம்படுத்த நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி, 50:50 என்ற விகிதத்தில் மத்திய / மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.



### iii) புதிய யுக்திகள், விளம்பரம், கண்காணித்தல், மேற்பார்வை, பயிற்சி மற்றும் திட்டமதிப்பாய்வு

இத்திட்டத்தின் கீழ் உள்ள விதிகளின்படி, திட்டத் தொகையில் 10 விழுக்காடு தொகையினை புதிய யுக்திகளுக்கும் (Innovative ideas), 2 விழுக்காடு தொகையினை விளம்பரம், கண்காணித்தல், பயிற்சி மற்றும் திட்ட மதிப்பாய்வு போன்றவற்றிற்கும் பயன்படுத்தப்படலாம்.

### ஈ) விருதுநகரில் மாபெரும் கைத்தறிக் குழுமம்

மத்திய அரசின் விரிவான கைத்தறி வளர்ச்சி குழுமத் திட்டத்தின் கீழ் (Comprehensive Handloom Cluster Development), விருதுநகரை மையமாகக் கொண்டு தமிழ்நாட்டில் பெரும் கைத்தறி வளர்ச்சிக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் பெரும் குழுமத் திட்டத்தில், கீழ்க்கண்ட 6 மாவட்டங்களில் உள்ள நெசவாளர்கள் பயன்பெற உள்ளனர்.

| வ. எண் | மாவட்டம் | நெசவாளர் பகுதிகள் |
|---|---|---|
| 1 | விருதுநகர் | சுந்தரபாண்டியம், ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம், அருப்புக்கோட்டை |
| 2 | மதுரை | செல்லூர், நிலையூர் |
| 3 | சிவகங்கை | காரைக்குடி |
| 4 | இராமநாதபுரம் | எமனேஸ்வரம், பரமக்குடி |
| 5 | தூத்துக்குடி | எட்டயபுரம், சாயர்புரம் |
| 6 | திருநெல்வேலி | சங்கரன்கோவில், கடையநல்லூர், வீரவநல்லூர் |

விருதுநகர் கைத்தறி பெருங்குழும திட்டமானது ரூ.87.68 கோடி மொத்த திட்டத் தொகையில், ரூ.70 கோடி மத்திய அரசின் மானியமாகவும், ரூ.8.84 கோடி மாநில அரசின் மான்யமாகவும் மற்றும் ரூ.8.84 கோடி பயனாளிகளின் பங்களிப்புடனும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், தொழில் நுட்ப மேம்பாட்டின் பொருட்டு, புதிய தறிகள், ஜக்கார்டுகள், நியுமேடிக் ஜக்கார்டுகள், மின்கலத்துடன் இணைக்கப்பட்ட விளக்குகள், மற்றும் தறி உபகரணங்கள் வழங்குதல், சாயச்சாலைகள், பொது சுத்திகரிப்பு நிலையங்கள், பொது வசதி மையங்கள், விற்பனை மையம், பயிற்சி மையங்கள் மற்றும் வடிவமைப்பு மையம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் 5 ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்திற்கு மத்திய அரசின் மானியத்தில் முதல் தவணையாக ரூ.48.02 கோடிக்கு ஒப்புதல் வழங்கி, இதுவரை ரூ.5.99 கோடியை விடுவித்துள்ளது. இதற்கு நிகரான மாநில அரசு பங்களிப்பாக இதுவரை ரூ.73.22 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, முதல் தவணை ரூ.7 கோடி மதிப்பில், 1640 பெடல் தறிகள், 2400 மின்சாரத்தினால் இயங்கும் தார் சுற்றும் இயந்திரங்கள், 20 நியுமேடிக் ஜக்கார்டுகள், 1670 ஜக்கார்டுகள், மின்கலத்துடன் இணைக்கப்பட்ட 4280 விளக்குகள் மற்றும் 20 டாபி பெட்டிகள் கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பொருட்களின் விநியோகம் தற்போது தொடங்கப்பட்டுள்ளதுடன், நடப்பாண்டிற்குள் முழுவதுமாக விநியோகிக்கப்படும்.

இத்திட்டத்தின் பிற பணிகள் அனைத்தும் வரும் 4 ஆண்டு காலத்திற்குள் செயல்படுத்தப்படும்.

## 10.8 கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தினை செயல்படுத்துதல்

நாட்டில் முதன்முறையாக தமிழ்நாட்டில், நெசவாளர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்கவும், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் 1975 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கு 1985-1986 ஆம் ஆண்டிலிருந்து 2006-2007 ஆம் ஆண்டு வரை மத்திய அரசு தனது பங்கினை வழங்கி வந்தது.

இத்திட்டத்தின் கீழ், நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் திட்டத்திற்கு சந்தாவாக செலுத்தினால், அதற்கு ஈடாக, மாநில அரசு, நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் தனது பங்காக ரூபாய்க்கு 4 பைசா வீதம் வழங்குகின்றது. இவ்வாறு பெறப்படும் மொத்த சந்தாவான 12 பைசா அரசு கணக்கில் செலுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு மாநில அரசு 9.5 விழுக்காடு வட்டி வழங்குகிறது. இவ்வாறு பெறப்படும் 9.5 விழுக்காடு வட்டித் தொகையில், 6.5 விழுக்காடு வட்டி நேரிடையாக நெசவாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படுவதோடு, எஞ்சிய 3 விழுக்காடு வட்டித்

தொகை நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் போன்ற நலத் திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 76,051 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். **2011–2012** ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென ரூ.**4.76** கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் 4 விழுக்காடு பங்குத் தொகைக்காக ரூ.5 கோடி 2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.9 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்காக ‘‘கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம்’’ 1997 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து, 60 வயது பூர்த்தியான நெசவாளர்கள் மாதந்தோறும் ரூ.1,000/– வீதம் முதியோர் ஓய்வூதியமாகப் பெற தகுதி பெறுகின்றனர். 2011-2012 ஆம் ஆண்டிற்கான துறையின் மானியக்கோரிக்கையின்போது சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியத் தொகை ரூ.400/–லிருந்து ரூ.1000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.200/–ம் அரசு கணக்கிலிருந்து ரூ.800/–ம் முதியோர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 18,646 நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். **2011–2012** ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென ரூ.**5.05** கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை செயல்படுத்த 2012-2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.10 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

கூட்டுறவு சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்கென ‘‘தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்’’ என்ற புதிய நலத்திட்டத்தினை 01.01.1992 முதல் இந்திய நாட்டில் அறிமுகப்படுத்திய முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இத்திட்டத்தில், நெசவாளர் உறுப்பினர் 60 வயதிற்கு முன் இறக்க நேரிட்டால், அவரது வாரிசுக்கு நெசவாளர் இறந்த தேதியிலிருந்து மாதம் ரூ.550/– வீதம் பத்து ஆண்டுகளுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது.

நெசவாளர்கள் 60 வயதிற்குள் இறக்க நேரிட்டால், 10 ஆண்டுகள் வரையிலோ அல்லது இறந்தவர் (உயிருடன் இருந்திருந்தால்) 60 வயதை எய்தக் கூடிய காலம் வரையிலோ, இதில் எது இறந்த நெசவாளர்களின் குடும்பத்திற்கு அதிக பயனளிக்குமோ, அவ்வகையில் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டிற்கான துறையின் மானியக்கோரிக்கையின் போது சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.550/–லிருந்து ரூ.1000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குடும்ப ஓய்வூதியத் தொகையானது, சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.350/–ம், அரசு கணக்கிலிருந்து ரூ.650/–ம் ஆக மொத்தம் ரூ.1,000/– மாத குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 1,549 நெசவாளர் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

## 10.11 கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம்

கைத்தறி நெசவாளர்களின் உடல்நலத்தைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், மத்திய அரசின் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தினை, 2005-2006 ஆம் ஆண்டு முதல் மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் ஐசிஐசிஐ லோம்பார்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், ஒரு நெசவாளர் குடும்பத்தில் 4 நபர்கள் ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.15,000/– வரை மருத்துவ உதவி பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு அமைப்பில் உள்ள நெசவாளர்கள், தனியார் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைத்தறி சம்பந்தப்பட்ட உபதொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும் உறுப்பினராக சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.

ஓர் ஆண்டிற்கு, ஒரு நெசவாளருக்கான காப்பீட்டு கட்டணமாக ரூ.939.76, ஐசிஐசிஐ லோம்பார்டு நிறுவனத்திற்கு மத்திய மாநில அரசுகளால் கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| மத்திய அரசின் பங்கு | ரூ.769.36 |
| மாநில அரசின் பங்கு (நெசவாளரின் பங்காக ரூ.50/–னையும் தமிழ்நாடு அரசே செலுத்துகிறது) | ரூ.170.40 |
| **மொத்தம்** | **ரூ.939.76** |

இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளில் இழப்பீட்டு கோரிக்கைகளை தற்போது பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் / விரைவு தூது அஞ்சல் மூலமும் தாக்கல் செய்யவும், கோரிக்கைகளின் நிலைப்பாட்டை தெரிந்துகொள்வதற்கு இணையதள வசதிகள், செலவழித்த தொகையை திரும்ப

பெறுவதற்குரிய கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து **30** நாட்களுக்குள் தொகை வழங்கவும், அனைத்து மாநிலங்களிலும் கோரிக்கைகளை ஆராய்வதற்கு தன்னிச்சையான பொது குறைதீர்க்கும் குழு மற்றும் சுகாதார முகாம்கள் நெசவாளர்களின் குடியிருப்பில் நடத்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## குறைதீர்க்கும் குழு

இத்திட்டத்திற்கான குறைதீர்க்கும் குழு மத்திய அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. இக்குழுவிடம் காப்பீட்டு நிறுவனத்தின் மீது கீழ்க்காணும் குறைகளின் அடிப்படையில் தனிநபர் மற்றும் பயனாளிகள் சேர்ந்தும் புகார்கள் தெரிவித்து குறைகளை தீர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது :–

- காப்பீட்டு நிறுவனத்தால் பகுதி மற்றும் முழு மருத்துவ கோரிக்கையும் மறுக்கப்படுவது
- மருத்துவ கோரிக்கைகளுக்கான தொகைகள் காலதாமதமாக வழங்கப்படுவது
- காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து தேவையான ஆவணங்கள் / மருத்துவ அட்டைகள் காலதாமதமாக வழங்குவது

2011-2012 ஆம் ஆண்டில் 8 குறைதீர்க்கும் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் **5** கூட்டங்கள் சென்னையிலும், இதர 3 கூட்டங்கள் முறையே காஞ்சிபுரம், விருதுநகர் மற்றும் ஈரோடு பகுதிகளில் இத்திட்டத்தின் கீழ் உள்ள நெசவாளர்களின் குறைகள் தீர்க்கும் வகையில் நடத்தப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ், 3,14,253 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர். **2011–2012**ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென ரூ.**4.33** கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 2012-2013 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில், மாநில அரசின் பங்காக ரூ.5.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.12 மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா
## அ. கைத்தறி நெசவாளர்கள் காப்பீட்டுத் திட்டம்

“மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா” என்ற காப்பீட்டுத் திட்டம், மத்திய அரசின் நிதிஉதவியுடன், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து, நெசவாளர்களுக்காக 2004-2005 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. “மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா” திட்டத்தின் கீழ், ஒரு நெசவாளருக்கு, ஓர் ஆண்டிற்கு ஆயுள் காப்பீட்டுக்கழகத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த காப்பீட்டுக் கட்டணம் ரூ.330/–இல், ரூ.150/–ஐ மைய அரசும், ரூ.100/–ஐ இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகமும், ரூ.80/–ஐ நெசவாளர் சார்பாக மாநில அரசும் செலுத்தி வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை விவரங்கள் பின்வருமாறு:–

| வரிசை எண். | விவரம் | காப்பீட்டுத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | இயற்கை மரணம் | 60,000 |
| 2. | விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,50,000 |
| 3. | விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் | 1,50,000 |
| 4. | விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம். | 75,000 |

2011-2012 ஆம் ஆண்டில், 479 இறப்பு கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு, கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.3.02 கோடி காப்பீடுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கூட்டுறவு அமைப்பில் உள்ள நெசவாளர்கள், தனியார் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைத்தறித் தொழில் சார்ந்த உபதொழிலில் ஈடுபட்டுள்ள கைத்தறித் தொழிலாளர்களும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் 2,43,321 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் **2011–2012**ஆம் ஆண்டு **ரூ.2** கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

## ஆ. சிக்ஷ சஹாயக் யோஜனா கல்வி உதவித் தொகை

இத்திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளரின் குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்க்கு 9–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை (இரண்டு குழந்தைகளுக்கு) அதிகபட்சம் 4 ஆண்டுகளுக்கு அல்லது 12–ஆம் வகுப்பு முடிக்கும் வரை (ரூ.600/– வீதம் இரு தவணைகளில்) ஆண்டொன்றுக்கு ரூ.1,200/– கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுவருகிறது. மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் ஏற்கனவே பதிவு செய்துள்ள நெசவாளர்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பலன் பெற தகுதியுடையவர்களாவர்.

மேற்காணும் இரண்டு திட்டங்களும், 2012-2013 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படுவதோடு, நெசவாளர்கள் சார்பாக மாநில அரசால் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துவதற்காக, 2012–2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ரூ.**2.20** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.13 டாக்டர் எம்.ஜி.ஆர்.கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் உதவித்தொகை வழங்குதல்

கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி தொகை வழங்கி அவர்களை உயர் கல்வி பயில ஊக்குவிக்கும் பொருட்டு **டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை** 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் முதல் மதிப்பெண் பெறும் ஒரு மாணவன் மற்றும் ஒரு

மாணவிக்கு படிப்பு முடியும் வரை கீழ்க்கண்ட 32 பிரிவுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

| வ. எண் | படிப்பு | ஒரு மாணவருக்கான உதவித் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | மருத்துவ பட்டபடிப்பு | 3500 |
| 2. | பல் மருத்துவ பட்டபடிப்பு | |
| 3, | பொறியியல் பட்டபடிப்பு | |
| 4 | தொழில் நுட்பவியல் பட்டபடிப்பு | |
| 5. | கால்நடை மருத்துவ பட்டபடிப்பு | |
| 6. | வேளாண்மை / தோட்டக்கலை | 3000 |
| 7. | மருந்தியல் பட்டபடிப்பு | |
| 8. | செவிலியர் பட்டபடிப்பு | 2500 |
| 9 | ஹோட்டல் நிர்வாகம் மற்றும் சமையல் தொழில் நுட்ப பயிற்சி | |
| 10. | முதுகலை பொறியியல் | 3500 |
| 11. | முதுகலை தொழில் நுட்பம் | |
| 12 | முதுகலை மருத்துவம் | |
| 13. | முதுகலை அறுவை சிகிச்சை | |
| 14. | முதுகலை கலை | |
| 15. | முதுகலை வணிகவியல் | |
| 16. | முதுகலை அறிவியல் | |
| 17. | முதுகலை வணிக நிர்வாகம் | |
| 18. | முதுகலை கணினி பிரயோகம் | |
| 19. | அகவிலை கணக்கியல் | |
| 20. | இளங்கலை கலை | 2500 |
| 21. | இளங்கலை அறிவியல் | |
| 22. | இளங்கலை வணிகவியல் | |
| 23. | இளங்கலை வணிக நிருவாகம் | |
| 24. | இளங்கலை வணிக மேலாண்மை | |
| 25. | இளங்கலை கணினி பிரயோகம் | |
| 26. | இளங்கலை கணினி அறிவியல் | |
| 27. | பல்தொழில்நுட்ப கல்வி | 2500 |
| 28. | இந்திய ஆட்சிப் பணி / இந்திய காவலர் பணி / வங்கி அலுவலர் தேர்வு | |
| 29. | +2 அதிக மதிப்பெண் | |
| 30. | பத்தாம் வகுப்பு அதிக மதிப்பெண் | 2000 |
| 31. | முடநீக்கியல் | 3000 |
| 32. | கைத்தறி தொழில்நுட்பவியல் | |

**2011–2012** ஆம் கல்வியாண்டில், 72 மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெற்று வருகின்றனர். இத்திட்டம், 2012-2013 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 10.14 இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் பயிலும் மாணவ, மாணவியர்க்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

சேலத்திலுள்ள இந்திய கைத்தறி தொழில் நுட்ப பயிலகத்தினால் நடத்தப்படும் 3 ஆண்டு கைத்தறி தொழில் நுட்ப பட்டயப் படிப்பிற்கு மாணவ, மாணவியரை தேர்வு செய்யும்போது நெசவாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப் படுகிறது. இந்த மாணவ, மாணவியர்க்கு தமிழ்நாடு அரசு, கீழ்க்கண்டவாறு கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறது.

(ரூபாயில்)

| வருடம் | மத்திய அரசின் பங்கு / மாதம் ஒன்றுக்கு | தமிழ் நாடு அரசின் பங்கு / மாதம் ஒன்றுக்கு | மொத்தம் |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 200 | 200 | 400 |
| இரண்டாம் ஆண்டு | 225 | 225 | 450 |
| மூன்றாம் ஆண்டு | 250 | 250 | 500 |

இதனைத் தவிர, இப்பட்டயப் படிப்பு பயின்று வரும் அனைவருக்கும் கூடுதல் கல்வி உதவித் தொகை மற்றும் புத்தகங்கள் வாங்குவதற்கு ஆண்டொன்றுக்கு தலா ரூ.1,000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், இரண்டாம் ஆண்டு பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,000/– கல்வி பயணப்படியும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு திட்டப் பணிக்கு ரூ.500/–ம் அளிக்கப்படுகிறது. தற்போது, இந்தக் கல்வி உதவித் தொகை, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

கடாக் (கர்நாடகம்) மற்றும் வெங்கடகிரி (ஆந்திரபிரதேசம்) ஆகிய இடங்களிலுள்ள பயிலகங்களில், மூன்று வருட கைத்தறித் தொழில் நுட்ப பட்டய வகுப்பில் படித்து வரும் தமிழக மாணவ, மாணவியர்க்கும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் கல்வியாண்டில், இத்திட்டத்தின்கீழ் 77 மாணவர்கள் உதவித் தொகை பெற்றுள்ளனர்.

2012-2013 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 11. துறை மேற்கொண்டு வரும் இதர நடவடிக்கைகள்

### 11.1 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும், விசைத்தறி ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க, கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985-இல் மத்திய அரசினால் இயற்றப்பட்டு, கைத்தறிகளில் மட்டுமே உற்பத்தி செய்ய பின்வரும் 11 வகை இரகங்களை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

| | | |
|---|---|---|
| (1) சேலை | (2)வேட்டி | (3) துண்டு, கம்சா மற்றும் அங்கவஸ்திரம் |
| (4) லுங்கி | (5)ஜடார் மேகலா/பாநெக் | (6)ஜமக்காளம், டார்ரி/டார்ரட் |
| (7)டிரஸ் மெட்டீரியல்ஸ் | (8)பேரெக் பிளாங்கெட்ஸ், காம்பால் / கம்பளி | (9)ஷால், லாய், மப்லர், பங்கி முதலியன |
| (10)உல்லன் டுவீடு | (11) கேஸ், பெட்சீட், பெட் கவர், கவுண்டர் பேன், பர்னிசிங் (டேப்பஸ்டிரி மற்றும் அப்ஹேறால்ஸ்டிரி உள்பட) | |

1985 ஆம் ஆண்டு கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை முனைப்புடன் தமிழ்நாட்டில் செயல்படுத்த பிரத்தியேகமாக அமலாக்கப்பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர் பதவி நிலையில் அமலாக்க அலுவலர் அலுவலகமும், சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் கைத்தறி மற்றும் உதவி இயக்குநர் பதவி நிலையில் உதவி அமலாக்க அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கைத்தறித் தொழிலைப் பாதுகாக்கவும் விசைத்தறிகள் மிகுந்துள்ள பகுதிகளில் அவ்வப்போது விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985–ஐ தீவிரமாக அமல்படுத்தும் வகையில் விசைத்தறிகள் அதிகம் உள்ள பகுதிகளில் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 11.2 கண்காட்சிகள் நடத்துதல்

கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகப்படுத்தும் வகையில், மத்திய அரசின் நிதி உதவியுடன் தமிழகத்தில் மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்தப்படுவதோடு, சிறப்பு கைத்தறிக் கண்காட்சிகளும், தேசிய அளவிலான கைத்தறிக் கண்காட்சியும் நடத்தப்படுகின்றன. 2011–2012 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின்



பல்வேறு பகுதிகளில் 49 மாவட்ட அளவிலான கைத்தறிக் கண்காட்சிகளும், 11 சிறப்பு கைத்தறிக் கண்காட்சிகளும், 1 தேசிய கைத்தறிக் கண்காட்சியும் நடத்தப்பட்டு அவைகளின் மூலம் ரூ.22.37 கோடி அளவிற்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான கைத்தறிக் கண்காட்சிகள் நடத்துவதற்கு, ஒரு கண்காட்சிக்கு ரூ.2 இலட்சமும், சிறப்பு கைத்தறிக் கண்காட்சி நடத்துவதற்கு ரூ.8 இலட்சமும், தேசிய கைத்தறிக் கண்காட்சியினை நடத்துவதற்கு ரூ.36.50 இலட்சமும் மானியமாக மத்திய அரசால் நிதி உதவி வழங்கப்படுகிறது.

## 11.3 பட்டு முத்திரை (Silk Mark)

பட்டு ஜவுளிகளின் விற்பனையை உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் அதிகப்படுத்தும் நோக்கில், இந்திய அரசால் ‘‘சில்க் மார்க்’’ 17.04.2004–இல் அறிமுகப்படுத்தப்பட்டது. சில்க் மார்க் (பட்டு முத்திரை) என்பது, மல்பேரி, டசர், எரி அல்லது மூகா பட்டு போன்ற சுத்த மற்றும் இயற்கை பட்டு இரகங்களில் பதியப்பட்டு இவற்றின் தரத்தினை உறுதி செய்ய உதவும் ஓர் அடையாளம் ஆகும். அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் மட்டுமே மேற்படி முத்திரைகளை பயன்படுத்த முடியும். கர்நாடகா சங்கங்களின் பதிவுச் சட்டம் 1960–இன்படி, பதிவு செய்யப்பட்ட அமைப்பான இந்திய அரசின் ஜவுளித் துறையின் கீழ் உள்ள மத்திய பட்டு வாரியத்தின் ஓர் அங்கமான இந்திய சில்க் நிறுவனம் மூலம் ‘‘சில்க் மார்க்’’ திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தனி நிறுவனம், மத்திய மாநில அரசு நிறுவனம், தலைமைச் சங்கம், தனியார் மற்றும் கூட்டாண்மை நிறுவனம் ஆகியவை இந்திய பட்டு முத்திரை அமைப்பில் (Silk Mark Organisation of India) உறுப்பினராகலாம். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினராக சேர்ந்த பின், ‘‘சில்க் மார்க்’’ முத்திரையை பட்டு ஜவுளிகளில் பயன்படுத்தலாம்.

இதுவரை, மாநிலத்திலுள்ள பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இயங்கிவரும் 73 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இந்நிறுவனத்தில் சில்க் மார்க்கின் அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளராக பதிவு செய்து 2011-2012–ஆம் ஆண்டில் 1,21,000 சில்க் மார்க் முத்திரைகளை கொள்முதல் செய்துள்ளன. ஒரு சில்க் மார்க் முத்திரையின் விலை ரூ.2 ஆகும்.

## 11.4 கைத்தறி முத்திரைத் திட்டம் (Handloom Mark Scheme)

கைத்தறி துணி இரகங்களுக்கு தனிப் பெயரை உருவாக்கி, அதன் விற்பனையை அதிகரிக்கும் நோக்கோடு 28.06.2006–இல் ‘கைத்தறி முத்திரை’ திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கைத்தறி உற்பத்தியாளர்களுக்கு ஒட்டு மொத்த தனித்தன்மை கிடைப்பதுடன், கைத்தறி உற்பத்திப் பொருட்களை தனித்து அறியவும், வாடிக்கையாளர்களுக்கு உண்மையான கைத்தறி

உற்பத்தி என்பதற்கான உத்திரவாதமும் கிடைக்கும். ஆகையால், இன்றைய வியாபார போட்டியில் கைத்தறிப் பொருட்களை தெளிவாக அறியவும் வாடிக்கையாளர்களோடு தொடர்பு கொள்ளவும் ''கைத்தறி முத்திரை'' மிகவும் உதவிகரமாக இருக்கும். இத்திட்டம் மத்திய ஜவுளித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

தமிழ்நாட்டில் கைத்தறி முத்திரைத் திட்டத்தின் கீழ் 31.03.2012 தேதிய நிலவரப்படி 912 தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், 5366 தனியார் / நெசவாளர்கள் / ஏற்றுமதியாளர்களும் கீழ்காணும் விபரப்படி பதிவு செய்து கைத்தறி முத்திரையை பயன்படுத்தி வருகின்றனர் :–

| பதிவு விபரம் | அகில இந்திய அளவில் | தமிழ்நாடு அளவில் |
|---|---|---|
| தனியார் நெசவாளர்கள் | 6067 | 5244 |
| மாஸ்டர் வீவர்ஸ் | 190 | 65 |
| நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் | 2387 | 912 |
| தலைமை நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் | 31 | 2 |
| சில்லறை விற்பனையாளர்கள் | 47 | 27 |
| ஏற்றுமதி உற்பத்தியாளர்கள் | 74 | 24 |
| ஏற்றுமதி விற்பனையாளர்கள் | 23 | 3 |
| ஏனையோர் | 144 | 1 |
| **மொத்தம்** | **8963** | **6278** |

கைத்தறி முத்திரை 20 பைசா, 35 பைசா, 60 பைசா மற்றும் ரூ.1.25 போன்ற நான்கு வகைகளில் விற்பனைக்குக் கிடைக்கின்றது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 20 பைசா மதிப்பிலான கைத்தறி முத்திரைகளை கொள்முதல் செய்து கைத்தறி துணி இரகங்களில் பயன்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் இது வரை 1,31,88,024 கைத்தறி முத்திரைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

## 11.5 புவிசார் குறியீடு சட்டம் 1999–இன் கீழ் கைத்தறி இரகங்களை பதிவு செய்தல்

ஒரு குறிப்பிட்ட பகுதியில் உற்பத்தி செய்யப்படும் சிறப்பு வாய்ந்த பொருட்களை 1999ஆம் ஆண்டு புவிசார் குறியீட்டு சட்டத்தின் கீழ் பதிவு செய்ய இயலும். இச்சட்டம் மூலம், போலி உற்பத்தியாளர்கள் இத்தகைய புவிசார் குறியீட்டுப் பொருட்களை தவறாக பயன்படுத்துவதிலிருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். புவிசார் குறியீட்டுப் பதிவு, இத்தகைய பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவதுடன், உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தில் ஓர் அங்கமான அறிவுசார் சொத்துரிமை வர்த்தக ஒப்பந்தத்தின் (TRIPS) கீழ் பிற நாடுகளிலும் பாதுகாப்பைப் பெற இயலும்.



இதுவரை, கைத்தறி மற்றும் துணிநூல் துறையால் காஞ்சிபுரம் பட்டு சேலை, பவானி ஜமக்காளம், மதுரை சுங்குடி சேலைகள், சேலம் வெண்பட்டு, ஆரணி பட்டு மற்றும் கோவை கோரா காட்டன் இரகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் பட்டு சேலைகளை உற்பத்தி செய்யும் 21 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 10 தனியார் பட்டு உற்பத்தியாளர்கள் புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஈரோடு சரகத்தைச் சார்ந்த 29 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் “ பவானி ஜமக்காளம்” உற்பத்தி செய்யும் அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்களாக புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், “கோவை கோரா காட்டன்” மற்றும் “சேலம் வெண்பட்டு” இரகங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர் சான்றிதழ் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**11.6 நெசவாளர் பயிற்சி மையம், ஈரோடு.**

கைத்தறி நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு, தமிழகத்தில் முதன்முதலாக ஈரோடு மாவட்டத்தில் “கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம்” ரூ.25.71 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி மையம் மூலம், வகுப்பறைப் பயிற்சி மற்றும் செய்முறைப் பயிற்சி என இருவகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. வகுப்பறைப் பயிற்சியில், கைத்தறியின் வகைகள், நூல் வகைகள், நூல் தரம், துணி இரகம், துணி வடிவமைப்பு, நெசவுத் தொழில் நுட்பம் போன்றவை தொடர்பாகவும், செயல்முறைப் பயிற்சியில் தடிம இரக துணி நெசவுப் பயிற்சி, சன்ன இரக துணி நெசவுப் பயிற்சி, மேம்படுத்தப்பட்ட ஜக்கார்டு தறியில் நெசவுப் பயிற்சி போன்றவைகள் அளிக்கப்படுகின்றன.

இப்பயிற்சி மையத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 600 கைத்தறி நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் உட்கட்டமைப்பு வசதி செய்யப்பட்டு 31.03.2012 வரையில் 583 நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2011-2012ஆம் ஆண்டிற்கான பயிற்சி மைய தொடர் செலவினம் மேற்கொள்வதற்காக ரூ.9 இலட்சம் விடுவிக்கப்பட்டு பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. மேலும் பயிற்சி பெறும் நெசவாளர்கள் தங்குவதற்காக ரூ.16.70 இலட்சம் மதிப்பீட்டில் விடுதி வசதி ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பயிற்சியாளர் தங்கும் விடுதி மற்றும் உணவு விடுதி கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றபின்னர், வெளி மாவட்டத்தைச் சார்ந்த நெசவாளர்களும் மேற்படி பயிற்சி மையத்தில் தங்கி பயிற்சி மேற்கொண்டு பயனடைவார்கள்.

## 11.7 தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியம்

2000-2001ஆம் ஆண்டில் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் பல்வேறு தொழிலில் ஈடுபட்டுள்ள உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கென தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியம் உள்ளிட்ட 9 நலவாரியங்கள் ஏற்படுத்தப்பட்டன. நிர்வாகக் காரணங்களை முன்னிட்டு 21.07.2004 முதல் இந்நல வாரியம் உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது. இதன்பின், அரசு ஆணையின்படி 01.09.2006 முதல் இவ்வாரியம் தனியாக தொழிலாளர் நலத்துறையின் கீழ் செயல்பட்டுவருகிறது.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும், அரசு பிரதிநிதிகள் 7 நபர்கள், வேலையளிப்பவர்களின் பிரதிநிதிகள் 7 நபர்கள் மற்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் 6 நபர்கள் உறுப்பினர்களாக இவ்வாரியத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது, இவ்வாரியத்தில் 2,44,660 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் அமைப்பு சாரா கைத்தறி நெசவாளர்களுக்கு ஓய்வு ஊதியம், மருத்துவ உதவி, கல்வி உதவித் தொகை, இயற்கை மரணம் / விபத்து / ஊனம் ஆகியவற்றிற்கு காப்பீடு தொகை வழங்கப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு :-

| வ. எண் | இனம் | ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | விபத்து காப்புறுதி | |
| | அ) விபத்தால் மரணம் | 1,00,000 |
| | ஆ) விபத்தால் ஊனம் | ஊனத்தின் தன்மையை பொறுத்து |
| 2 | இயற்கை மரணம் | 15000 |
| 3 | ஈமச்சடங்கு உதவி | 2000 |
| 4 | கல்வி உதவி | |
| | i) 10ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1000 |
| | ii) 10ஆம் வகுப்பு தேர்ச்சி | 1000 |
| | iii) 11ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1000 |
| | iv) 12ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1500 |
| | v) 12ஆம் வகுப்பு தேர்ச்சி | 1500 |
| | vi) இளநிலை பட்டப்படிப்பு | 1500 |
| | vii) இளநிலை பட்டப்படிப்பு (விடுதி) | 1750 |
| | viii) முதுநிலை பட்டப்படிப்பு | 2000 |
| | ix) முதுநிலை பட்டப்படிப்பு (விடுதி) | 3000 |
| | x) தொழில் நுட்ப படிப்பு (Professional Degree) | 2000 |
| | xi) தொழில் நுட்ப படிப்பு (விடுதி) | 4000 |
| | xii) தொழில்நுட்ப மேற்படிப்பு | 4000 |
| | xiii) தொழில்நுட்ப மேற்படிப்பு (விடுதி) | 6000 |
| | xiv) ஐடிஐ / பட்டயப்படிப்பு | 1000 |
| | xv) ஐடிஐ / பட்டயப்படிப்பு (விடுதி) | 1200 |
| 5 | திருமண உதவி | 2000 |
| 6 | மருத்துவ உதவிகள் | |
| | i) மகப்பேறு உதவி | 6000 |
| | ii) மூக்குக் கண்ணாடி | 500 வரை |
| 7 | ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |

இந்நலவாரியத்தின் மூலம் 31.03.2012 வரை 1,48,742 பயனாளிகளுக்கு ரூ.32.13 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### 11.8 சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்

கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டு சந்தையில் கைத்தறி துணி விற்பனையினை மேம்படுத்தவும் தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறி துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடையே ஏற்றுமதி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும்

வெற்றிச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க ஆண்டொன்றுக்கு ரூ.1 இலட்சம் செலவிடப்படுகிறது.

இத்திட்டத்தினை செயல்படுத்த, 2012-2013 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 11.9 புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்

கைத்தறியில் புதிய வடிவமைப்பினை ஊக்குவிக்கும் வகையில், புதிய வடிவமைப்பினை உருவாக்கும் நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பருத்தி, பட்டு போன்ற பல்வேறு இரகங்களில் சிறந்த வடிவமைப்புகளை உருவாக்கும் நெசவாளர்களுக்கு இரகங்கள் வாரியாக கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன:-

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.5,000/– |
| இரண்டாம் பரிசு | ரூ.3,000/– |
| மூன்றாம் பரிசு | ரூ.2,000/– |

இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களில் புதிய வடிவமைப்புகள் கிடைப்பதோடு, ஏற்றுமதிக்கும் புதிய வடிவமைப்புகள் கிடைக்கின்றன. இத்திட்டத்திற்கான செலவினம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 11.10 நெசவாளர்களின் “ ஹட்கோ ” (HUDCO) கடன் தள்ளுபடி செய்தல்

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கான தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், கைத்தறி நெசவாளர்களுக்கு “ஹட்கோ” நிறுவனம் கடன் வழங்கியது. நெசவாளர்கள் கடனைத் திரும்பச் செலுத்த இயலாத நிலையில் இருந்ததால், 31.03.2008 தேதியில் நிலுவையாக இருந்த கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட வீடு கட்டும் கடன் தொகையினை தள்ளுபடி செய்து, ஹட்கோ நிறுவனத்திற்கு 2008 முதல் 2015 முடிய உள்ள காலங்களுக்கு செலுத்த வேண்டிய தவணைத் தொகையான ரூ.11.70 கோடியை ஒவ்வொரு காலாண்டிலும் அரசே செலுத்தவும் ஆணையிடப்பட்டதின் அடிப்படையில், கடந்த நான்காண்டுகளில் நெசவாளர்கள் சார்பாக ஹட்கோ நிறுவனத்திற்கு இதுகாறும் ரூ.9.61 கோடி அரசு செலுத்தியுள்ளது.

2012-2013 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. விசைத்தறி பிரிவின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 12.1 தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நல வாரியம்

விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு, தமிழக அரசு, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் 1982-இன் கீழ் தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நல வாரியம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த நல வாரியத்தின் மூலம் விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு விபத்துக் காப்பீடு, இயற்கை மரணம், ஈமச்சடங்கு, கல்வி, திருமணம், மகப்பேறு மற்றும் மூக்குக் கண்ணாடி வாங்கிட உதவி தொகை வழங்குவதுடன் ஓய்வூதிய நலத்திட்ட உதவி தொகைகளும் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, 1,22,510 விசைத்தறி நெசவு தொழிலாளர்கள் இந்த நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, 44,527 விசைத்தறி தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களுக்காக ரூ.8.79 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### 12.2 விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துதல்

விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் மூலம், இருமாதத்திற்கொருமுறை 500 யூனிட்டுகள் வரையில் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில், இதுவரை 1,25,734 விசைத்தறியாளர்கள் மின் இணைப்புப் பெற்று தொடர்ந்து பயன் பெற்று வருகின்றனர். 2011–2012 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கு ரூ.50.73 கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2012-2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.62.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 12.3 ஒருங்கிணைந்த ஜவுளி பூங்காக்கள்

**ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டம் (SITP – Scheme for Integrated Textile Parks)**

மத்திய அரசு, ஏற்கனவே செயல்படுத்தி வந்த ஆயத்த ஆடை ஏற்றுமதிப் பூங்கா திட்டம், ஜவுளித் தொழில் மைய உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத்திட்டம் ஆகிய இரு திட்டங்களையும் ஒருங்கிணைத்து, 2005 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தினை அமுல்படுத்தியது. இது 10–வது மற்றும் 11–வது ஐந்தாண்டு திட்ட காலங்களில் செயல்பாட்டில் இருந்தது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 10 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டங்களில் அறிவிக்கப்பட்ட 15 ஜவுளிப் பூங்காக்களின் செயலாக்க விவரம் பின்வருமாறு:–

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடி) | ஒப்பளிப்பு செய்யப் பட்ட வருடம் | நேரடி வேலை வாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை | மறைமுகமாக வேலைவாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை | உற்பத்தி தொடங்கிய / தொடங்கப் படும் நாள் |
|---|---|---|---|---|---|---|
| **ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்கா திட்டம் (APES – Apparel Park for Exports Scheme)** | | | | | | |
| 1. | நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா திருப்பூர் | 17.62 | அக்டோபர் 2002 | 7000 | 9000 | 2005 முதல் செயல் பட்டு வருகிறது |
| 2. | ஆயத்த ஆடை பூங்கா இருங்காட்டுக் கோட்டை | 26.70 | ஜுன் 2004 | 10000 | 10000 | 2006 முதல் செயல்பட்டு வருகிறது |
| **ஜவுளித் தொழில் மைய உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம் (TCIDS - Textile Centre Infrastructure Development Scheme)** | | | | | | |
| 3. | ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம், காஞ்சிபுரம் | 21.81 | பிப்ரவரி 2004 | உட்கட்டமைப்பு வசதி | | முடிக்கப் பட்டது. |
| 4. | காற்றாலை மின் உற்பத்தி திட்டம், டெகிக், (TEKIC) திருப்பூர் | 25.00 | நவம்பர் 2003 | மின் உற்பத்தி | | நிறைவுற்றது. |
| 5. | காவேரி உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, குமாரப்பாளையம் | 33.32 | ஜனவரி 2005 | 1500 | 15000 | ஆகஸ்ட் 2006 முதல் செயல் பட்டு வருகிறது |
| **ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் (SITP - Scheme for Integrated Textile Parks)** | | | | | | |
| 6. | உயர்தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, பல்லடம் | 55.42 | பிப்ரவரி 2005 | 2500 | 3500 | ஏப்ரல் 2008 முதல் செயல் பட்டு வருகிறது |
| 7. | உயர்தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, குமாரப்பாளையம் | 34.82 | ஜுலை 2006 | 1500 | 1500 | பிப்ரவரி 2009 முதல் செயல் பட்டு வருகிறது |
| 8. | மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, வாடிப்பட்டி | 87.30 | மார்ச் 2007 | 3000 | 4000 | அக்டோபர் 2009 முதல் செயல் பட்டு வருகிறது |
| 9. | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர் | 116.10 | மார்ச் 2007 | 3000 | 4000 | அக்டோபர் 2010 முதல் செயல் பட்டு வருகிறது |
| 10. | கில்ட் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, செங்கப்பள்ளி, திருப்பூர் | 149.45 | மார்ச் 2006 | 5000 | 7500 | 2013 முதல் செயல் பட தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது |
| 11. | சைமா பதனிடும் ஆலை, கடலூர் | 112.60 | பிப்ரவரி 2007 | 5000 | 10000 | 2013 முதல் செயல்பட தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது |
| 12 | வைகை உயர்தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, ஆண்டிப்பட்டி | 61.01 | ஆகஸ்ட் 2009 | 2500 | 3500 | 2013 முதல் செயல்பட தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது |
| 13 | காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு கைத்தறி பட்டுப் பூங்கா | 83.83 | ஏப்ரல் 2010 | 10000 | 8200 | 2013 முதல் செயல்பட தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | எஸ்.எல்.எஸ். ஜவுளிப் பூங்கா, பாகலூர் | 126.20 | அக்டோபர் 2011 | 7330 | 13700 | 2013 முதல் செயல்பட தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது |
| 15 | பல்லவாடா தொழில் நுட்ப ஜவுளிப் பூங்கா, பல்லவாடா | 117.08 | அக்டோபர் 2011 | 5300 | 21000 | 2013 முதல் செயல்பட தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது |
| | **மொத்தம்** | **1068.26** | | **63630** | **110900** | |

இவ்வனைத்து சிறப்புத் திட்டங்களும் கிராமப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் கணிசமான அளவில் வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றன.

தமிழகத்தில் புதிய ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்படுவதால், மாநிலத்தில் நெசவுத் தொழில் வளம் பெறும். உள்ளூர் தொழில் முனைவோர் அதிக அளவில் பங்கு பெறுவதனாலும், அதிக வேலை வாய்ப்புகள் ஏற்படும் என்பதால், ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின் கீழ் தமிழகத்தில் அமைக்கப்பட்டு வரும் அனைத்து ஜவுளிப் பூங்காக்களுக்கும், அவற்றின் திட்டத் தொகையில் 9 விழுக்காடு அளவிற்கு, ரூ.9 கோடிக்கு மிகாமல் மானியம் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிக்க, மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது.

## 12.4 திருப்பூர் கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டம்

நம்நாட்டில் பின்னலாடைத் தொழிலில் முக்கிய பங்கு வகிக்கும் திருப்பூர் பகுதியில் உள்ள சாயத் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் மாசுடன் கூடிய சாயக் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய உச்ச நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற ஆணைகளுக்கிணங்க, ரூ.742.93 கோடி செலவில் 18 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதற்கென ரூ.519.46 கோடி அளவுக்கு வங்கியில் கடன் பெறப்பட்டுள்ளது. மேலும், இந்தக் கடன் சுமையினாலும், ஏற்றுமதிச் சந்தையில் ஏற்பட்டுள்ள சரிவினாலும் திருப்பூர் பின்னலாடைத் தொழில் பாதிக்கப்பட்டது பற்றி எடுத்துக்கூறி சாயச்சாலை உரிமையாளர்கள் அரசுக்கு விடுத்த வேண்டுகோளை ஏற்று திருப்பூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சாயச்சாலை உரிமையாளர்களால் அமைக்கப்பட்டுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்காக ஏற்பட்ட கடனைக் குறைக்கும் நோக்குடன் 2009–2010ஆம் ஆண்டில் ரூ.320 கோடி நிதி உதவி அறிவிக்கப்பட்டது. அதில் மத்திய அரசின் பங்கு ரூ.200 கோடியும், மாநில அரசின் பங்கு ரூ.120 கோடியும் ஆகும்.

இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒதுக்கீடு செய்துள்ள தொகை ரூ.320 கோடியில், இதுவரை ரூ.150 கோடி விடுவிக்கப்பட்டு, 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூ.107.96 கோடி வங்கியில் பெற்ற கடன் தொகைக்கு எதிராக ஈடுசெய்யப்பட்டுள்ளது.

இப்பிரச்னையில், தமிழக அரசு போர்க்கால நடவடிக்கைகள் எடுத்ததன் பயனாக, சாய சுத்திகரிப்பு ஆலைகளின் பிரதிநிதிகள், விவசாயிகளின் பிரதிநிதிகள், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசுத்துறை செயலாளர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்திற்குப்பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.200 கோடி தொகை புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி பூஜ்ய நிலை எட்டும் பணிக்கு பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வட்டியில்லாக் கடனாக வழங்கி ஆணையிட்டார்கள். தமிழக அரசின் சார்பில் குழு ஒன்றினை குஜராத் மாநிலம் சென்று கழிவுநீர் சுத்திகரிப்பு முறை குறித்து அறிந்து வந்து அறிக்கை அளிக்குமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் தலைமையிலான குழு இதுகுறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தது.

குழு தமது அறிக்கையில் பரிந்துரைத்தவாறு, திருப்பூரில் உள்ள பொது சுத்திகரிப்பு நிலையங்கள் நானோ தொழில் நுட்ப முறை (Nano Technology) அல்லது பிரைன் மறுபயன்பாடு தொழில் நுட்பம் (Brine Reuse Technology) முறை இவற்றில் ஏதேனும் ஒரு புதிய தொழில் நுட்ப முறையில் பூஜ்ய கழிவுநீர் நிலையை எட்டும் பணியை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அரசு இவ்விரண்டு தொழில்நுட்பங்களில் ஒன்றினை பயன்படுத்தி பூஜ்ய கழிவுநீர் நிலையை எட்டும் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வட்டியில்லா கடன் தொகையில், 18 பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அவற்றின் திறனுக்கேற்ப ரூ.179.34 கோடியினை ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது.

புதிய தொழில் நுட்ப முறையில் பூஜ்ய கழிவு நீர் நிலையை எட்ட தேவைப்படும் உபகரணங்கள் கொள்முதல் செய்ய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக அண்ணா தொழில்நுட்ப பல்கலைக் கழகம் (Anna Institute of Technology) அல்லது இந்திய தொழில் நுட்ப கழகத்தின் (Indian Institute of Technology, Madras) மூலமாக ஆய்வு செய்து மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் பரிந்துரைக்கப்படும் பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கீழ்க்கண்ட விகிதாசாரப்படி வட்டியில்லா கடன் விடுவிக்க ஆணையிடப்பட்டுள்ளது :-

1) முதல்கட்டமாக பொது சுத்திகரிப்பு நிலையங்கள் கருவிகள் நிறுவுவதற்கு தேவையான கட்டுமானப் பணிக்காக (Civil Work) 10 விழுக்காடு கடன் தொகை விடுவிக்கப்படும்.

2) 20 விழுக்காடு தொகை கருவிகள் கொள்முதல் செய்யும் வகையில் விடுவிக்கப்படும்.

3) 40 விழுக்காடு தொகை கருவிகள் பொது சுத்திகரிப்பு நிலையங்களில் பெறப்படும்போது விடுவிக்கப்படும்.

4) 20 விழுக்காடு தொகை கருவிகள் நிறுவப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்பொழுது விடுவிக்கப்படும்.

5) இறுதியாக 10 விழுக்காடு தொகை, புதிய தொழில் நுட்ப கருவிகள் ஒரு வருட காலத்திற்கு, முழுமையாக பூஜ்ய கழிவுநீர் நிலையை அடைந்த பின் விடுவிக்கப்படும்.

அரசு ஆணையிட்டுள்ளபடி, திருப்பூரிலுள்ள 18 பொது சுத்திகரிப்பு நிலையங்களில் 17 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு சமர்ப்பித்துள்ளன. இவற்றில் முதல்கட்டமாக, 7 பொது சுத்திகரிப்பு நிலையங்களின் திட்ட அறிக்கை மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் வழியாக அண்ணா பல்கலைக் கழகத்தின் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பொது சுத்திகரிப்பு நிலையங்களின் விரிவான திட்ட அறிக்கையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து பெறப்படவுள்ளது. அதன் அடிப்படையில், முதற்கட்டமாக கட்டுமானப் பணிக்காக 10 விழுக்காடும், கருவிகள் கொள்முதல் செய்வதற்காக 20 விழுக்காடும் மொத்தம் ரூ.24.36 கோடி, அரசு விடுவித்துள்ள ரூ.179.34 கோடி வட்டியில்லா கடன் தொகையிலிருந்து விடுவிக்கப்படவுள்ளது. மீதமுள்ள தொகையான ரூ.154.98 கோடி 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13. 2012–2013 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்

### 13.1 இயக்குநரகத்திற்கு ரிமோட்டில் இயங்கும் அஞ்சல் முத்திரைப் பொறி கொள்முதல் செய்தல்.

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்திற்கு ரூ.1.30 இலட்சம் செலவில் ரிமோட்டில் இயங்கும் அஞ்சல் முத்திரைப் பொறி 2012-2013 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்படும்.

### 13.2 இயக்குநரகத்தில் தீயணைப்பான் பொருத்துதல்

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்தில் 13 தீயணைப்பான்கள் தலா ரூ.6,000/- வீதம் மொத்தம் ரூ.0.78 இலட்சம் செலவில் 2012-2013 ஆம் ஆண்டில் பொருத்தப்படும்.

### 13.3 இயக்குநரகத்திற்கு இன்வர்ட்டர் கொள்முதல் செய்தல்.

சென்னை, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்திற்கு ரூ.5 இலட்சம் செலவில் இன்வர்ட்டர் 2012-2013 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்து பொருத்தப்படும்.

### 13.4 10 சரக அலுவலகங்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல்.

சரக அளவில் திட்டமிடுதல், மைய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களை நெசவாளர்களுக்கு வழங்கி புள்ளி விவரங்கள் சேகரிக்க இரண்டாம் கட்டமாக 10 சரக அலுவலகங்களுக்கு முறையே ரூ.50,000/– வீதம் கணினி மற்றும் அச்சு இயந்திரங்கள் ரூ.5 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து 2012-2013 ஆம் ஆண்டில் நிறுவப்படும்.

### 13.5 இயக்குநர் அலுவலகத்திற்கு மடிக்கணினி, ஒளிப்பேழை, ஸ்கேனர் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்தல்.

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்திற்கு மடிக்கணினி, ஒளிப்பேழை, ஸ்கேனர் மற்றும் உபகரணங்கள் ரூ.1.50 இலட்சம் செலவில் 2012-2013 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்படும்.

### 13.6 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் பயோமெட்டிரிக் முறையில் கணினிமயமாக்குதல்

சரகங்களில் உள்ள அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கு ஏதுவாக, 2012-2013 ஆம் ஆண்டில் பிரத்யேக மென்பொருள் மூலமாக பயோமெட்டிரிக் முறையில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கணினிமயமாக்கப்படும். இப்பணியினை அரசு நிறுவனமான "எல்காட்" மூலம் ரூ.5 இலட்சம் செலவில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 13.7 கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலக கூட்ட அரங்கினை நவீனமயமாக்குதல்.

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலக கூட்ட அரங்கினை ரூ.12.42 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 2012-2013 ஆம் ஆண்டில் நவீனமயமாக்கப்படும்.

## 14. துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### அ. கூட்டுறவு நூற்பாலைகள்

தொழில் வளர்ச்சியை கருத்திற்கொண்டும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தரமான சிட்டா நூல் தட்டுப்பாடின்றி நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்யவும், 13 கூட்டுறவு நூற்பாலைகள் மாநிலத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் 1958 முதல் 1965 வரையுள்ள காலகட்டத்தில் நிறுவப்பட்டன. பின்னர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் தாயகம் திரும்பியோர் நலன் கருதி மத்திய அரசு கூட்டுறவு நூற்பாலைகளைத் நிறுவ அனுமதி வழங்கியதன் பேரில், தமிழ்நாடு அரசு 1984–1985 ஆம் ஆண்டுகளில் மேலும் 5 கூட்டுறவு நூற்பாலைகளை நிறுவியது. இவற்றின் மூலம் நெசவாளர்களுக்கு தரமான நூல் வழங்கவும், நூல் தட்டுப்பாட்டை தவிர்க்கவும், தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெறவும் வழிவகை ஏற்பட்டது.

பல்வேறு காரணங்களினால் 13 கூட்டுறவு நூற்பாலைகள் நலிவடைந்து முற்றிலுமாக செயலிழந்தன. 2004–2005ஆம் ஆண்டிலிருந்து பின்வரும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகள் மட்டுமே 97,280 கதிர்களுடன் இயங்கி வருகின்றன.

- அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்
- பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்
- கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி, கன்னியாகுமரி மாவட்டம்
- கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்.
- புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

மாநில அரசின் விலையில்லா வேட்டி சேலை திட்டம், பள்ளி மாணவ மாணவியருக்கான விலையில்லா சீருடைத் திட்டம் மற்றும் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வெளிச்சந்தை துணி வகை உற்பத்திக்கு தேவைப்படும் பல்வேறு நூல் இரகங்களை இவ்வாலைகள் உற்பத்தி செய்து வருகின்றன.

தற்போது இயங்கி வரும் 5 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்த, தென்னிந்திய துணிநூல் ஆராய்ச்சி கழகம் ரூ.104.41 கோடி மதிப்பில் தயார் செய்த திட்ட அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டு ஆலைகளை தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதி உதவியுடன் நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### ஆ. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்)

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ''கோ-ஆப்டெக்ஸ்'' என்ற வணிகப் பெயருடன் மாநில அளவிலான கூட்டுறவு நிறுவனமாக 1935ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. கோ-ஆப்டெக்ஸ் தனது சிறப்பான திட்டமிட்ட செயல்முறைகளால் 77 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு தனது இடைவிடாத பணியை வெற்றிகரமாக செய்து இந்தியாவிலேயே முதன்மை தலைமை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கமாகத் திகழ்ந்து வருகிறது.

முக்கிய குறிக்கோள்கள்:

1. சங்கத்தில் இணைந்துள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான நூல் இரகங்களை வாங்கி, விற்பனை செய்வது.
2. சங்கத்தில் இணைந்துள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்த சரக்குகளை வாங்கி விற்பனை செய்வது

இது தவிர, கோ—ஆப்டெக்ஸ் கீழ்காணும் அரசு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முகமை நிறுவனமாகவும் இயங்கி வருகிறது.

1. விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்.

2. முதியோர் ஒய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்.

3. ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் (மற்றும்) சிறுபான்மையினர் நலம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (மற்றும்) சீர்மரபினர் நலம் மற்றும் சமூக நலம் (மற்றும்) சத்துணவுத் திட்டத்துறைகள் மூலம் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டம்.

## 2011-2012 ஆம் ஆண்டின் செயல்பாடுகள்

### 1. சில்லரை விற்பனை

2011-2012 ஆம் ஆண்டில் கைத்தறி துணி மற்றும் விசைத்தறி துணி இரகங்கள் ரூ.217.91 கோடி மதிப்பிற்கு சில்லறை விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதில் ஏற்றுமதி விற்பனையான ரூ. 2.21 கோடியும் அடங்கும். இது சென்ற ஆண்டு நடைபெற்ற சில்லறை விற்பனையை விட ரூ.19.59 கோடி அதிகமாகும். ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த விழாக்காலங்களில்

Co-optex



International Export Showroom - T Nagar, Chennai

மட்டும் கொள்முதல் செய்வதற்கு பதிலாக தொடர்ந்து கொள்முதல் செய்வதன் மூலமாகவும், புதிய விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டதாலும், ஏற்கனவே உள்ள விற்பனை நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டதாலும், விற்பனை நிலையங்களின் இடத்தை மாற்றி அமைத்ததாலும், புதிய வடிவமைப்புகளுடன் கூடிய கைத்தறி துணிகளை அறிமுகப்படுத்தியதாலும், இவ்விற்பனை சாதனையை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் எய்துள்ளது.

## 2. அரசுத் திட்டங்கள்

### விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்

தமிழ் நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் பண்டிகையின்போது விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் முகமை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் 170.84 இலட்சம் சேலைகளும், 169.75 இலட்சம் வேட்டிகளும் ரூ.350 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டு வருகிறது.

### முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் கோ–ஆப்டெக்ஸ் மூலம் 2011 தீபாவளி பண்டிகையின் போது 16.28 இலட்சம் சேலைகளும், 5.50 இலட்சம் வேட்டிகளும் முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2012 பொங்கல் பண்டிகையின்போது 17.15 இலட்சம் சேலைகளும், 5.60 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டுள்ளது.

### சீருடைத் துணி விநியோகம்

இத்திட்டத்தின் கீழ் பள்ளி சிறார்களுக்கு சமூக நலத்துறை மூலம் இரண்டு இணை சீருடைகள் வழங்குவதற்கு தேவையான 39.59 இலட்சம் மீட்டர் காக்கி ட்ரில் துணியும், 75.71 இலட்சம் நீல நிற கேஸ்மெண்ட் துணியும் கொள்முதல் செய்து விநியோகம் செய்துள்ளது. இது தவிர ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறைகளுக்கு 19.44 இலட்சம் சீருடைத் துணியும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

## 3. நூல் விற்பனை

கூட்டுறவு நூற்பாலைகளிடமிருந்தும் ஒப்பந்த புள்ளிகள் மூலமாகவும் ரூ.184 கோடி மதிப்புள்ள நூல் இரகங்களை கொள்முதல் செய்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனை செய்துள்ளது.

## 4. வடிவமைப்பு மேம்பாடு

விற்பனைச் சந்தையில் ஏற்பட்டுள்ள போட்டிகளை எதிர்கொள்ளும் வகையில் வடிவமைப்பில் கோ–ஆப்டெக்ஸ் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :-



(i) மணப்பெண் மனம் கவரும் சுபமுகூர்த்தப் பட்டுச் சேலைகள் ரூ.3,000/– முதல் ரூ.6,000/– வரை குறைந்த விலையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

(ii) நட்சத்திரக் கலெக்ஷன், சர்வ லக்ஷனா கலெக்ஷன் ஆகிய புதிய எம்பிராய்டரி பாலியஸ்டர் மற்றும் பட்டு இரகங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

(iii) 2011–2012–ஆம் ஆண்டில் சேலைகள், திரைச்சீலைகள், ஆயத்த ஆடைகள், குர்தா மற்றும் சுடிதார் இரகங்களில் எண்ணற்ற நிறங்களில் 1,579 புதிய வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**5. விற்பனை மேம்பாடு:**

(i) மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரைப்படி, **"இரண்டு உருப்படி வாங்கினால் ஒன்று இலவசம்"** என்கின்ற திட்டத்தினை சங்கம் தொடங்கிய நாளினை முன்னிட்டு முதன்முறையாக 17.03.2012 முதல் 02.04.2012 வரை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியது. இத்திட்டம், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் வழக்கமாக வாங்க வரும் வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பினை பெற்றதுடன், அதிக அளவு புதிய வாடிக்கையாளர்களையும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களுக்கு ஈர்த்துள்ளது. இத்திட்டத்தினை அதிக அளவு வாடிக்கையாளர்கள் பயன்படுத்தியதால், கடந்த ஆண்டு இதே காலத்தில் ரூ.7 கோடிக்கு விற்பனை

செய்யப்பட்ட துணிகள், நடப்பு ஆண்டில் ரூ.34.84 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(ii) ஏற்றுமதி இரகங்கள் உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு நியாயமான விலையில் கிடைப்பதற்கு ஏதுவாக சென்னை பாண்டிபஜாரில் கோ–ஆப்டெக்ஸின் முதலாவது பன்னாட்டு ஏற்றுமதி இரகங்கள் விற்பனை நிலையம் என்ற பெயரில் 30.11.2011 அன்று தொடங்கப்பட்டது. இது தவிர, குளிர்சாதன வசதியுடன் முழுவதும் நவீனமயமாக்கப்பட்ட பெங்களூரில் மல்லேஸ்வரம் விற்பனை நிலையம் 01.01.2012 அன்றும், மும்பை தாதர் விற்பனை நிலையம் 23.03.2012 அன்றும் மற்றும் ஈரோடு நேதாஜி சாலையிலுள்ள விற்பனை நிலையம் 25.03.2012 அன்றும் திறக்கப்பட்டுள்ளன.

(iii) தேசிய கைத்தறி கண்காட்சி 2012, 10.02.2012 முதல் 05.03.2012 வரை சென்னை கோ-ஆப்டெக்ஸ் கண்காட்சித் திடலில் நடத்தப்பட்டது. நவீன விளம்பர முறை மூலம் இந்த கண்காட்சியில் ரூ.3.58 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டது. இது தவிர, 2011–2012 ஆம் ஆண்டில் 65 கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் ரூ.3.96 கோடி மதிப்பிற்கான துணி இரகங்கள் விற்பனை செய்யப்பட்டன.



**குழும வளர்ச்சித் திட்டம் (மத்திய அரசு உதவியுடன்)**

1 திருவண்ணாமலை மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய பகுதிகளில் இரு பெரிய குழும வளர்ச்சித்திட்டங்கள் ஒவ்வொன்றும் ரூ.2 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2 மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன், ஒவ்வொன்றும், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் 1) பாதிரிவேடு 2) ஆப்பக்கூடல் 3) சிறுமுகை 4) நிலையூர் 5) கண்டாச்சிபுரம் 6) சோளிங்கர் 7) தாண்டம்பாளையம் 8) பழனி 9) வீரவநல்லூர் 10) ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் சிறிய குழும வளர்ச்சித்திட்டங்கள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3 மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன், ஒவ்வொன்றும், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் பல்லவர், வரதராஜா, ஆரணி மற்றும் இராசிபுரம் சூப்பர் ஆகிய 4 பட்டு சிறிய கைத்தறி குழும வளர்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4 விருதுநகர் கைத்தறி பெருங்குழுமத்திட்டம் ரூ.87.68 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தபட்டு வருகிறது. இதில் மத்திய அரசு ரூ.70 கோடி (80 விழுக்காடு) மானியமாகவும், மீதமுள்ள ரூ.17.68 கோடி மாநில அரசு (10 விழுக்காடு) மற்றும் பயனாளிகளின் பங்காக ரூ.17.68 கோடி (10 விழுக்காடு) வழங்கப்படுகிறது. இத்திட்டம் 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட உள்ளது. இதில், முதல் கட்டமாக நெசவாளர்களுக்கு தறி மற்றும் இதர உபகரணங்கள் வழங்குவதற்காக மத்திய அரசு ரூ.599.72 இலட்சமும், மாநில அரசு ரூ.73.22 இலட்சமும் வழங்கியுள்ளது. நெசவாளர்களுக்கு மொத்தம் ரூ.746.16 இலட்சம் மதிப்புள்ள தறி மற்றும் இதர உபகரணங்கள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2012–2013 ஆம் ஆண்டிற்கான செயல்முறைத் திட்டம்

(i) சரக்கு இருப்பினை கட்டுப்படுத்தவும் துல்லியமான விற்பனை தகவல்களை துரிதமாக பெறும் நோக்கிலும் அனைத்து 201 விற்பனை நிலையங்களிலும் ஈ.ஆர்.பி என்னும் கணிப்பொறி மென்பொருள் அமைப்பு செயல்படுத்தப்பட உள்ளது.

(ii) சிறந்த தரத்திற்கு இணையாக கோ–ஆப்டெக்ஸின் கொள்முதல் மற்றும் விற்பனை நடைமுறைகளை தரம் நிர்ணயம் செய்வதற்கு ஏதுவாக ஐ.எஸ்.ஓ. 9001 :2008 தரச்சான்றிதழ் பெறப்படும்.

(iv) ஆராய்ச்சி மற்றும் விற்பனை திட்டமிடலுக்கு புள்ளி விவரங்கள் கிடைப்பதை உறுதி செய்யவும் கொள்முதல் பிரிவு மற்றும் விற்பனையாளர்களுக்கு



பொறுப்புணர்வை கொணரவும், அனைத்து இரகங்களுக்கும் பார்–கோடு லேபிள் அறிமுகப்படுத்தப்படும்.

(v) தமிழகத்தில் சென்னை, சேலம், திருச்செந்தூர், திருப்பூர், கர்நாடக மாநிலத்தில் பெங்களூரு, ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் காக்கிநாடா மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஷிர்டி ஆகிய நகரங்களில் புதிய விற்பனை நிலையங்கள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பாந்தியன் சாலையில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை விற்பனை நிலையம் புதுப்பிக்கப்படுவதுடன் சென்னை அண்ணா சாலை மற்றும் பாண்டி பஜாரில் ஏற்கனவே உள்ள விற்பனை நிலையங்கள் மாற்றி அமைக்கப்பட்டு புதிய கட்டிடங்கள் கட்டப்படும். கோ-ஆப்டெக்ஸின் இரண்டாவது பன்னாட்டு ஏற்றுமதி விற்பனை நிலையம் ஹைதராபாத்தில் திறக்கப்படும். உத்திரப்பிரதேச மாநிலத்தில் லக்னோ மற்றும் இராஜஸ்தான் மாநிலத்தில் ஜெய்ப்பூர் ஆகிய நகரங்களில் உள்ள விற்பனை நிலையங்கள் முழுவதுமாக நவீனமயமாக்கப்படும்.

(vi) இளைய தலைமுறை நெசவாளர்களைக் கவரும் வகையில், சந்தை விற்பனை இரகங்களுக்கு கூடுதல் ஊக்க ஊதியம் வழங்கி கைத்தறி நெசவாளர்கள் மாதமொன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.5,000/– வரை வருமானம் பெறுவது உறுதி செய்யப்படும்.

(vii) பருவக் காலத்திற்கு ஏற்ப விற்பனை மற்றும் விளம்பரத் திட்டம் உருவாக்கப்பட்டு அதன் அடிப்படையில் உற்பத்தித் திட்டம் வகுக்கப்படும். உதாரணமாக கோடைக்காலத்திற்கு ஏற்ற, பருத்தி இரக புடவைகள், ஆயத்த சட்டை துணி வகைகள் மற்றும் கைத்தறியிலான ஜீன்ஸ் போன்ற இரகங்கள் தக்க விளம்பரத்துடன் அறிமுகப்படுத்தப்படும்.

(viii) 2012–2013 ஆம் ஆண்டில் சில்லறை விற்பனை இலக்கு ரூ.437 கோடியினை எய்துவதற்கு ஏதுவாக, அனைத்து விற்பனை நிலையங்களிலும் தேவையான பல்வேறு இரகங்களில் ஜவுளிகள் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில், சங்கங்கள் வாரியான உற்பத்தித் திட்டம் வகுக்கப்பட்டு ஆண்டு முழுமைக்கும் வழங்கப்பட்டுள்ளது. உற்பத்தித் திட்டத்தில் 20 விழுக்காடு துணி மேம்பாடு மற்றும் வடிவமைப்பு பிரிவில் உருவாக்கப்படும் புதிய வடிவமைப்புகளுடன் கூடிய இரகங்களுக்கு தனியாக ஒதுக்கப்படும்.

(ix) 2012-2013 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற உள்ள நிதி உதவியான நெசவாளர் மற்றும் வடிவமைப்பாளர் திட்டத்தின் மூலம் கோ-ஆப்டெக்ஸ் ரூ.15 இலட்சம் மதிப்பில் 1,858 புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்த உள்ளது.

## இ. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை

கூட்டுறவு அமைப்பின் கீழ் இல்லாத நெசவாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் துணிகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்காக கடனுதவி வழங்கும் நோக்குடன் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இக்கழகத்தில் தற்போது 11,841 உறுப்பினர்கள் உள்ளனர். இக்கழகம் தற்போது உறுப்பினர்கள் பெற்ற கடன்களை திரும்ப பெறப்படாததால், நடைமுறை மூலதனம் இன்றி செயல்பட்டு வருகிறது. ஆகவே, இக்கழகம் புதிய கடன்கள் வழங்காமல், ஏற்கனவே கடன்பெற்று நிலுவையின்றி திரும்ப செலுத்தும் உறுப்பினர்களுக்கு மட்டும் தொடர்ந்து கடன் வழங்கி வருகிறது.

இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமான ரூ.4.29 கோடியில் தமிழக அரசின் பங்கு ரூ.2.67 கோடியாகும். எஞ்சியுள்ள மூலதனமான ரூ.1.62 கோடி அங்கத்தினர்களால் செலுத்தப்பட்டதாகும். இக்கழகம், தேசியமயமாக்கப்பட்ட வங்கியான பாரத மாநில வங்கி மூலம் ரூ.3.30 கோடி காசுக்கடன்

வசதி பெற்றுள்ளது. மேலும், பாரத பாட்டியாலா வங்கியிடமிருந்து பெற்ற காசுக்கடன் தொகை ரூ.2.17 கோடியை திரும்ப செலுத்த இயலாத நிலை ஏற்பட்டதனால், அரசு ரூ.2.17 கோடி நிதி உதவி வழங்கி கடனை திரும்ப செலுத்த உதவியது.

## 2011 – 2012 ஆம் ஆண்டு செயல்பாடுகள்

நெசவாளர்களின் நலனை மேம்படுத்தும் விதத்தில் தற்போது செயல்படும் நிதி உதவி செயல்பாட்டினை தவிர, வேறு பல நல திட்டங்கள் மூலமாக செயல்பட, இந்நிறுவனம் செயல்பட்டுவருகிறது. இதில் முதல் கட்டமாக மத்திய மாநில அரசு மான்ய உதவியுடன் தமிழ்நாட்டில் 9 இடங்களில் ஒருங்கிணைந்த கைத்தறி கூட்டுறவு குழும திட்டத்தின் மூலம் பல்வேறு நல திட்டங்களை நெசவாளர்களுக்கு அளிப்பதற்கான செயல் முகவராக செயல்பட்டு, முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுகளுக்கான செயல்திட்டங்கள் நிறைவடைந்துள்ளது. மேலும் தற்போது குழும செயல்பாடுகளுக்கான 3வது தவணை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய ரயில்வேக்கு ‘ஆகாஷ்’ மூலம் கைத்தறி துணி வகைகளை விற்பனை செய்து வருகிறது. சென்ற ஆண்டு 2011–2012–இல் கழகம் ஆகாஷ் மூலமாக இரயில்வே துறைக்கு ரூ.7 கோடி மதிப்பிலான துணிவகைகளுக்கான தேவைகள் நிறைவேற்றப்பட்டு இதனால் கழகத்திற்கு உத்தேசமாக ரூ.11.50 இலட்சம் வரை வருமானம் ஈட்டப்பட உள்ளது. இக்கழகம் 2011–2012–இல் நெசவாளர்களுக்கு ரூ.80 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. இக்கழகத்தால் உத்தேசமாக ரூ.13.27 இலட்சம் இலாபம் ஈட்டப்பட உள்ளது.

## 2012 – 2013 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்

நடப்பாண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

1. நிறுவனத்தின் கடன் வழங்கலில் முன்னேற்றம் காணும் பொருட்டு 250 கடன்தாரர்கள் பயன்படும் வகையில் ரூ.120 இலட்சம் வழங்கவும், கடன்தாரர்களிடமிருந்து ரூ.190 இலட்சம் நிலுவையை வசூலிக்கவும் திட்டமிட்டுள்ளது.

2. கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் நெசவாளர்களுக்குத் தேவைப்படும் நூலினை தேசிய கைத்தறி வளர்ச்சிக்கழகம் (NHDC) மூலமாக வழங்கி, அதற்காக மத்திய அரசிடமிருந்து மானியம் பெறவும் திட்டமிட்டுள்ளது.

3. இக்கழகம் ஆகாஷ் மூலமாக இரயில்வேதுறைக்கு ரூ.10 கோடி மதிப்பிலான துணிவகைகள் விற்பனை செய்யவும் திட்டமிட்டுள்ளது.

### ஈ. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்

நலிவடைந்த மற்றும் மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்தி புத்துயிர் அளித்திடவும், விசைத்தறிக் கூடங்களை நிறுவுவதற்கும், துணிநூல் தொழிலை மறுசீரமைக்கும் நோக்கத்துடனும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், 1969 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகத்தின் கீழ், 96 தறிகளைக் கொண்ட 2 விசைத்தறிக் கூடங்கள், அருப்புக்கோட்டை மற்றும் சிவகிரி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், கோவையிலுள்ள குறிச்சி பகுதியில் 12 தானியங்கித் தறிகளும், 24 சாதா தறிகளும் கொண்ட தறிக்கூடம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், பருத்தி மற்றும் பாலியஸ்டர் துணி வகைகளை உற்பத்தி செய்து வருகிறது. தற்போது, இக்கழகத்தில் 20 பணியாளர்களும், 140 தொழிலாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

அரசின் விலையில்லா சீருடைத்துணி வழங்கும் திட்டத்திற்கான துணிகளை இக்கழகம் உற்பத்தி செய்து வருகிறது. மேலும், இக்கழகம், பாலியஸ்டர் சீருடைத் துணி தயாரித்து உற்பத்தி செய்து வழங்குவதற்கான ஆணைகளை மாநில போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு மின்வாரியம், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், காவல் துறை மற்றும் பிற பொது நிறுவனங்களிடமிருந்து பெற்று வழங்கி வருகிறது. இதன் மூலம் இக்கழகம், தமிழகத்தின் அரசு நிறுவனங்களுக்கான துணித்தேவையை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கிறது.

இந்நிறுவனம், 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.33.91 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது.

### 2012–2013 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்

இந்நிறுவனம், 2012–2013 ஆம் ஆண்டில் ரூ. 92 கோடி மதிப்புள்ள 291.95 இலட்சம் மீட்டர் துணிகளை விற்பனை செய்து, ரூ.92 இலட்சம் நிகர இலாபம் ஈட்டும் என எதிர்நோக்கப்படுகிறது.

### உ. தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம்

1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு சரிகை ஆலை, ISO 9001 தரச் சான்று பெற்ற மாநில அரசு சார்ந்த ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனம், பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் தரமான சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகின்றது. இந்நிறுவனம், சரிகை உற்பத்தியினை மேற்கொள்வது மட்டுமல்லாமல், மத்திய சரிகை கொள்முதல் குழுவின் ஒதுக்கீட்டு ஆணையின் மூலம் பெறப்படும் சரிகையின் தரத்தினை பரிசோதனை செய்யும் பணியினையும் மேற்கொண்டு வருகின்றது. இந்நிறுவனம், "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" (X-Ray Fluorescence Analyzer) மூலம் சரிகை மாதிரிகள் மற்றும் சரிகையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகள் போன்றவற்றிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அவற்றில்

உள்ள சரிகையின் தரத்தை ஆய்வு செய்யும் பணியையும் மேற்கொள்கிறது. மேற்படி எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம், காஞ்சிபுரம் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றது. கும்பகோணம் பகுதியின் சரிகை தேவையினைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு சரிகை நிறுவனம் 1999–ஆம் ஆண்டில் கும்பகோணத்தில் ஒரு உற்பத்தி கிளையினை உருவாக்கியுள்ளது.

இவ்வாலையில், 10 பணியாளர்களும் 103 தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர்.

தங்கம், வெள்ளி விலை உயர்வினை கருத்திற்கொண்டு நெசவாளர்கள் கோரியதன் அடிப்படையில், சரிகையில் உள்ள தங்கத்தின் அளவீட்டினை 0.60 விழுக்காடிலிருந்து 0.50 விழுக்காடாகவும், வெள்ளி அளவீட்டினை 57 விழுக்காடிலிருந்து 40 விழுக்காடாகவும் குறைத்து அரசாணை வழங்கப்பட்டது.

சரிகை தட்டுப்பாடு ஏற்படாவண்ணம், சரிகையை பட்டு கூட்டுறவு சங்கங்களே தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–இன் கீழ் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் வெளிச்சந்தையில் தேவைக்கு ஏற்ப கொள்முதல் செய்து கொள்ள 16.03.2012–இல் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சரிகை நிறுவனம், 2011–2012 ஆம் ஆண்டில் 22,974 மார்க்குகள் (Marc) சரிகையை உற்பத்தி செய்து 23,728 மார்க்குகள் சரிகையை ரூ.32.36 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது.

**2012–2013 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்**

(i) இந்நிறுவனத்தில் வெள்ளிப்பட்டிழை கொள்முதல் ஒப்பந்தப்புள்ளி கோரும் முறையினை 30 நாட்களுக்கு ஒரு முறை என்பதை மாற்றி மாதம் 2 முறை ஒப்பந்தப்புள்ளி கோரும் முறையினை இந்த ஆண்டு முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) இந்நிறுவன சரிகை உற்பத்திக்கு தேவைப்படும் வெள்ளிப்பட்டிழை தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்படி கொள்முதல் செய்யப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும் முறையினை எளிதாக்கினால், மேலும் புதிய வெள்ளிப்பட்டிழை வழங்குபவர்கள் ஒப்பந்தப்புள்ளி அளிப்பர் என்ற நோக்கத்தில் "e-tender" மின்னனு ஒப்பந்தப்புள்ளி முறை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) இந்நிறுவனம், 2012–2013 ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு 4,000 மார்க் சரிகையினை உற்பத்தி செய்து விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது.

**ஊ. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு**

ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, 1973 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை ISO:9001-2008 சான்றிதழ் பெற்ற நிறுவனம் ஆகும். இவ்வாலையில், 19 பணியாளர்கள் மற்றும் **281** தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இவ்வாலை, ஒரு மாதத்தில் சுமார் 15 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிடும் திறன் பெற்றுள்ளது. இவ்வாலை, அரசின் பள்ளி சிறார்களுக்கு வழங்கப்படும் சீருடைத் திட்டத்திற்குத் தேவைப்படும் துணிகளை பதனிட்டு வழங்கும் பணியினை மேற்கொள்வதோடு, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், சர்வோதயா சங்கம், மத்திய சிறைச்சாலை, கேரளா மற்றும் கர்நாடகா கைத்தறி வளர்ச்சிக் கழகங்கள் மற்றும் தனியார் ஏற்றுமதியாளர்களிடமிருந்து வழங்கப்படும் துணிகளையும் பதனிட்டு வருகிறது.

இவ்வாலையின் சாயக் கழிவு நீரினை சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்தும் வண்ணம் எதிர் சவ்வூடு பரவுதல் முறையில் சுத்தம் செய்து அதனை முழுதாக ஆலையினுள் பயன்படுத்த ரிவர்ஸ் ஆஸ்மோசிஸ் பிளான்ட் மற்றும் ரிஜெக்ட் மேனேஜ்மென்ட் சிஸ்டம் (Reverse Osmosis plant with Reject Management System) நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றாமையால் 23.02.2011 முதல் இவ்வாலை மூடப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மூடப்பட்டிருந்த இவ்வாலையை உடனே திறக்கும் நோக்கத்துடன் அபராதத் தொகையான ரூ.1,11,46,363/–ஐ உடனே செலுத்தி, 10.06.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி முறையில் துவக்கி வைக்கப்பட்டு ஆலையின் உற்பத்தி மீண்டும் தொடங்கப்பட்டது.

2011-2012 ஆம் ஆண்டில், **102.55** இலட்சம் மீட்டர் துணி பதனிடப்பட்டு, ரூ.14.57கோடி மதிப்பிற்கு வணிகம் நடைபெற்றுள்ளது.

**ஆலையின் 2012–2013 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்:**

நடப்பாண்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று ஆலையின் உற்பத்தி திறனை நாள் ஒன்றுக்கு 45,000 மீட்டரிலிருந்து 70,000 மீட்டராக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

**எ. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), சென்னை**

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினை நெறிப்படுத்தும் பொருட்டு, டிசம்பர், **1994** ஆம்

ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்விணையத்தின் உறுப்பினராகவுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை, நியாயமான விலையில் நாடு முழுவதும் உள்ள பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களில் கொள்முதல் செய்து விநியோகிப்பதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக, தமிழக அரசு பங்கு மூலதனமாக, ரூ.25 கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ.2.07 கோடியும், ரொக்கத்திற்கு பஞ்சு வாங்கும் பொருட்டு இணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

2011–2012 ஆம் ஆண்டில், இந்நிறுவனம், நூற்பாலைகளே பஞ்சு கொள்முதல் செய்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் மூலமாக தற்போது இயங்கி வரும் 5 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு, ரூ.1.50 கோடி நிதி உதவி வழங்கியுள்ளது. இது தவிர கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நேரடியாக முன்பணம் ரூ.0.75 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சேவைக் கட்டணமாக ரூ.23.78 இலட்சம் பெற்று இந்நிறுவனம் 2011–2012ஆம் ஆண்டில் தோராயமாக ரூ.0.50 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

## 15. 2012-2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடு

“கைத்தறி மற்றும் துணிநூல்” மானியக் கோரிக்கை எண்.17–இன் கீழ், 2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் பின்வரும் விவரப்படி ரூ.72207.51 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :–

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு **2012–2013** (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் | 25600.00 |
| 2 | விலையில்லா வேட்டி சேலைத் திட்டத்தின் கீழ் கையாளும் தொகை | 1280.00 |
| 3 | கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்குதல் | 616.00 |
| 4 | விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்குதல் | 6249.00 |
| 5 | கைத்தறித் துணி விற்பனைக்குத் தள்ளுபடி | 7845.50 |
| 6 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விற்பனை ஊக்குவிப்பு/தள்ளுபடி | 7800.00 |
| 7 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழும வளர்ச்சித் திட்டம் | 1000.00 |
| 8 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கைத்தறிகளை மேம்படுத்த குழு அணுகுமுறை | 1000.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 2012–2013 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 9 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் | 500.00 |
| 10 | கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் | 545.30 |
| 11 | மகாத்மா காந்தி புங்கர் பீமா திட்டத்தின் கீழ் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | 220.00 |
| 12 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் குடும்ப ஓய்வூதியத் திட்டம் | 500.00 |
| 13 | பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வட்டி மானியம் | 1300.00 |
| 14 | திருப்பூரில் பூஜ்ய கழிவு வெளியேற்றும் அமைப்பு – உதவித் தொகை | 0.01 |
| 15 | 13–வது நிதிக்குழுவின் மான்யத்தை பயன்படுத்தி கடல்சார் கழிவு வெளியேற்று திட்டங்கள் | 0.01 |
| 16 | ஹட்கோ கடனை தள்ளுபடி செய்தல் | 180.00 |
| 17 | புதிய வடிவமைப்புகளை உருவாக்க உதவி | 15.00 |
| 18 | கைத்தறி நெசவாளர் பயிற்சி அளிப்பதற்காக பயிற்சி மையம் அமைத்தல் | 9.00 |
| 19 | கைத்தறித் துறையினை புதுப்பித்து, புத்துயிரூட்டி, மறு சீரமைப்பினை செயல்படுத்துதல் | 0.01 |
| 20 | திருப்பூரில் பூஜ்ய கழிவு வெளியேற்றும் அமைப்பிற்கான கடன் | 15498.00 |
| 21 | விசைத்தறிக் கணக்கெடுப்பு (ஈரோடு விசைத்தறி சேவை மையத்திற்கான வாடகை) | 0.25 |
| 22 | டெக்ஸ்கோவிற்கு வழிவகை முன்பணம் | 0.01 |
| 23 | கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிலுவைக்கான வழிவகை முன்பணங்கள் | 0.01 |
| 24 | கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு வழிவகை முன்பணங்கள் | 0.01 |
| 25 | அமலாக்கப் பிரிவின் நிர்வாகச் செலவு | 164.26 |
| 26 | நிர்வாகச் செலவுகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள்) | 1606.28 |
| 27 | தலைமைச் செயலக பொருளாதாரப் பணிகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள்) | 278.86 |
| | **மொத்தம்** | **72207.51** |

**மரு.ச.சுந்தரராஜ்**
**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**